திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 9   18—11—55   :   வெள்ளி   :   விலை 3 அணா   மலர்: 14

தேசிய முகாமினரின் திருவிளையாடல்கள்!

"திடீர் காங்கிரஸ்காரர்கள் மூக்குடைபட்டனர்!"

கக்கன் சீறுகிறார்! பழைய காங்கிரஸ்காரர்களோ சிரிக்கின்றனர்!

●

வாழ்வாவது மாயம், பண்ணுவது திண்ணம், எனவே இப்பிரபஞ்சத்தில் வாழும் மக்கள், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகியவைகளை விரும்புதல் கூடாது. அவையனைத்தும் வெறும் மாயை, இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை, — என்றெல்லாம் ஓயாமல் உபதேசம் செய்யும் பேர்வழிகள்தான் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை நவரத்தினங்களிழைத்த நாகரீக ஆபரணங்களையும் மற்ற சுகபோகங்களையும் அனுபவித்துத் திரிவர்!

ஆனால், இவர்களுக்குப் பெயரோ முற்றும் துறந்த முனிவர்கள்!—அது போலவே அரசியல் துறையில் இன்று தேசிய முகாமினரின் சொல்லும் — செயலும் காட்சியளித்து வருகிறது!

நீதிக் கட்சியினர் ஆட்சி செய்த போது — அன்று தேசிய முகாமினர், அக்கட்சித் தலைவர்களை பதவிப் பித்தர்கள், உத்தியோக வேட்டைக்காரர்கள், பதவியென்றால் பல்லை யிளித்து அரசியல் தர்மத்திற்கு விரோதமாக ஆட்டம் போடுவர் — என்றெல்லாம் ஏசினர்.

ஏசியது மட்டுமல்ல, காங்கிரஸ், ஆளும் பொறுப்பை ஏற்றால் அரசியல் தர்மத்திலிருந்து சிறிதும் வழுவாது — காந்தியடிகளின் உபதேசம் எதுவோ அதற்கேற்ப நேர்மையுடன் நடப்போம், அரசியல் கண்ணியத்தைக் காப்பாற்றுவோம் — என்றும் பறைசாற்றினர்!

ஆனால், தேசிய முகாமினரிடம் ஆட்சிப்பொறுப்பு சிக்கியவுடனே அவர்கள் கையாண்டுவரும் முறைகளை நடுநிலையிலிருந்து கவனிப்போர் எவரும், இவர்களைப் போல பதவி வேட்டைக்காரர்களைக் காண முடியாதென்றும், ஆதிக்கம் தங்களின் கைநழுவ விடாமலிருக்க, எவ்வளவு பட்டரகமாக நடக்க வேண்டுமோ அந்த அளவுக்குத் துணிவு கொண்டுவிட்டனர் என்பதையும் உணரக்கூடும். கடந்த எட்டு ஆண்டுகால அரசியல் நிகழ்ச்சிகளே நாம் கூறும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் போதிய எடுத்துக் காட்டாகுமென்று கூறலாம்.

உதாரணமாக, தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைமைப்பீடம் அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களிலும் நகரசபைத் தலைவர் தேர்தல் போட்டிகளிலும், கையாண்ட முறைகள், மகா பட்டரகமானதென்பது மட்டுமல்ல, பித்தலாட்டத்தில் அவர்களுக்குள்ள "அபாரத் திறமை"யை எடுத்துக்காட்டும் சாட்சியங்களாகக் காட்சியளிக்கின்றன!

நகரசபைத் தேர்தல்களில்— —எப்படியாவது பெருவாரியான இடங்களைக் கைப்பற்றினால் போதும்-அதற்கு இருக்க வேண்டிய கண்ணியத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்ற முறையில், நேற்றுவரை தேசியத்தாருக்கு மாறுபட்டிருந்தவர்களுக்கெல்லாம் தேசிய மூலாம் பூசப்பட்டு, "மேக்கப்" செய்து தேர்தல் கோதாவில் தேச பக்தர்களாக நிறுத்தினர்! இன்றைய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைமைப் பீடம் இந்தத் தன்மான மற்ற நடவடிக்கைகளுக்குச் சிறிதும் வெட்கப்படவில்லையென்றே தெரிகிறது.

இப்படி திடீர் காங்கிரஸ் காரர்களாக மாறியவர்களில் எத்தனை பேர் வெற்றி பெற்றார்களென்று ஆராய்வோமானால் அது ஓர் பாரதமாகவே முடியும்! எனவே உதாரணத்திற்குஒருசம்பவத்தை மட்டும் குறிப்பிடுகிறோம்.

ஈரோடு நகரசபையில் சென்ற முறை சுயேச்சையாக நின்று வெற்றிபெற்ற ஒருநடிகத்தோழர் —இம்முறை திடீரென காங்கிரஸ் பக்தியால் உந்தப்பட்டு பாவமன்னிப்பு பெற்று-ஏற்கனவே அவர் மீது படிந்திருந்த தேசத் துரோகத் தீட்டுகளுக்கெல்லாம் ஒரு முழுக்குப் போட்டு பரம தேச பக்தராக உருமாறி அதன் பேராலேயே தேர்தலில் போட்டியிட்டார்! அவர் திடீர் காங்கிரஸ் காரர் ஆகச் சம்மதித்தது அல்ல

நக்கீரன்

விசித்திரம்—அப்பேர்ப்பட்ட நபர்களுக்கு கைலாகு கொடுத்து வரவேற்று—உடனே தேர்தலில் போட்டியிட அவ்வித உருப்படிகளுக்கு தேசிய மூலாம் பூசப்படுகிறதே அந்த வெட்கக் கேட்டைத்தான் வாசகர்களும் குறிப்பாக உண்மைக் காங்கிரஸ் காரர்களும் சிந்திக்க வேண்டுகிறோம்.

இறுதியாக—அந்த திடீர் காங்கிரஸ் காரரின் தேர்தல் முடிவு என்ன ஆயிற்று தெரியுமோ! உள்ளதும் போச்சுதடா நடுத்தெரு நாராயணா என்ற கதை மாதிரி 'அரோகரா' ஆகிவிட்டது! சுயேச்சையாளராக அந்த நடிகத் தோழர் போட்டியிட்டிருந்தால் உண்மையிலேயே வெற்றி பெற்றிருப்பார். ஆனால் மக்களின் சக்தியோ திடீர் காங்கிரஸ் காரர்களுக்கும், காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கும் சரியான புத்தி புகட்டி விட்டது!

பாவம் அந்தத் தோழர் இன்றுங்கூட நமச்சிவாயம் நமச்சிவாயம் என முணு முணுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி! இப்படியாக நகர சபைத் தேர்தலில் திரு காமராசரின் பரமானந்த சீடராகிய கக்கன் தலைமை, பல குட்டுகள் பெற்றன!

நகர சபை உறுப்பினர் தேர்தலில் பெற்ற படிப்பினைக்குப் பிறகாவது தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைமை திருந்தி யிருக்க வேண்டாமா? ருசி கண்ட பூனை சும்மா இருக்காது என்பார்களே —அது போலவே, நகர சபைத் தலைவர் தேர்தலிலும், திரு கக்கனின் காங்கிரஸ் ஆழந் தெரியாமல் காலை விட்டு அய்யோடா— அப்பாடா என்று அலறித் துடிக்கிறது.

காஞ்சிபுரம் நகர சபைத் தலைவர் தேர்தல் இம்மாதம் 11-ந் தேதி நடைபெற்றதல்லவா? அந்த நகர சபையில் மொத்த உறுப்பினர்களில் 19-பேர் காங்கிரஸ்—10-பேர் எதிர்க் கட்சி. இதில் சுயேச்சையாக நின்று போட்டி யின்றி வெற்றி பெற்ற ஒரு பிரபலஸ்தரிடம், காங்கிரசில் சேர்ந்து விட்டால் தலைவர் பதவி தரப்படும் என்று உள்ளூர் காங்கிரஸ் முகாமினர் உபதேசம் செய்தனராம்!

இதைக் கேட்ட அந்த சுயேச்சை பிரபலஸ்தருக்கு நாக்கில் தண்ணீர் சொட்டிற்றாம்! வேண்டுமானால் பண நாதனைக் கூட துணைக் கழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணினாராம்! எனவே அந்தத் திடீர் காங்கிரஸ் காரரை தங்கள் கட்சி அபேட்சகராக, காஞ்சி நகரசபைத் தலைவர் பதவிக்கு காங்கிரஸ் முகாமினர் நிறுத்தினர்!

சுயேச்சையாளர்கள் எல்லாம் ஒன்றுகூடி திரு. பெருமாள் என்பவரை நிற்கவைத்தார்களாம்! முடிவு என்ன தெரியுமோ...காங்கிரசுக்கு 13—சுயேச்சை அபேட்சருக்கு 16 ஓட்டுகள்! இந்த முடிவைக்கண்ட திடீர் காங்கிரஸ் காரர் திகைத்து விட்டாராம்! இவரின் நிலை இப்படியென்றால், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைமைப்பொறுப்பைச் சுமந்திருக்கும் கக்கன் அவர்களோ, ஆஹா கபர்தார்! 19 காங்கிரஸ்காரர்களில் 6 பேர் துரோகம் செய்துவிட்டனர் விட்டேனா பார்! நடவடிக்கை எடுத்து தவிடுபொடி யாக்குகிறேன் பார் என்று வெண்ணெய் வெட்டி வீரரைப்போலத் துள்ளுகிறாராம்!

வட ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் தேர்தலிலும் இப்படித்தான் காங்கிரஸ்காரர்களே. காங்கிரசின் இன்றைய கோணங்கித்தனத்திற்குகரிபூசி முற்றுப்புள்ளி வைத்தனர். காங்கிரஸ் உறுப்பினர்கள் பெருவாரியாக யிருந்

(8-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் கட்டுரை

நான் கண்ட சந்த்ராம்

ஜாட் - பாட் - தோடக் மண்டல் (1)

ஜாட்—பாட்—தோடக் மண்டல் என்ற சாதி ஒழிப்புக் கழகத்தை, 1922 ஆம் ஆண்டில், லாகூரிலே, துவக்கினர் சந்த்ராம்.

அக்கழகம் பதிவு பெற்றதுமாகும்; அதனுடைய நோக்கம், கொள்கை, இலட்சியம் எல்லாம் —இந்துக்கள் எனப்படுகிற மக்களிடையே கற்பிக்கப்பட்டுள்ள நால்வருணச் சாதியை அறவே ஒழித்துக் கட்ட வேண்டும். பிறப்பால் உயர்வு, தாழ்வு, கற்பிப்பது மூடத்தனம். தீண்டாமை தொலைக்கப்பட வேண்டும். சம பந்தி போஜனம் ஏற்பட வேண்டும். கலப்புத் திருமணம் எங்கும், யாவராலும் வரவேற்கப்பட வேண்டும். அதுபோதுதான் வேற்றுமை ஒழிந்து, ஒற்றுமை நிலவ வழி ஏற்படும். 'ஒன்றேகுலம்! ஒருவனே தேவன்!' என்பது நடைமுறையில் வரும்—என்பவைகளே அக்கழகத்தின் நோக்கம், கொள்கை, இலட்சியம்.

முதல் தலைவர் :

அந்தக் காலத்தில் சட்டசபை அங்கத்தினராயிருந்த பாயி பரமாநந்தர்தான் அக்கழகத்தின் முதல் தலைவர்.

பாயி பரமானந்தர், தனது சொந்த மகளைச் சாதிவிட்டுச் சாதி மணஞ்செய்வித்து, கலப்புத் திருமணத்தை, 'ஊருக்கல்லவோ உபதேசம் உனக்கல்லடி!...' என்றபடி யல்லாது, நடைமுறையிலுங் கையாண்ட காரணத்தால், அவரைப் பொருத்தமானத் தலைவராக அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார் சந்த்ராம். அனைவரும் அங்ஙனே ஏற்றினர் —போற்றினர் பாயி பரமானந்தரை.

அதன் பிறகு பலவாண்டுகள் அக்கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றினர். ஆனல் அவரது போக்கு ஒரு முனையில் நிலைத்து நிற்காது. வேறு முனையில் திரும்பினது மிகமிக வெட்ககரமானதாய் அமைந்தது. வயது ஏறஏற பாயி பரமானந்தரது நாட்டமெல்லாம் இந்து மகா சபையின் பக்கம் திரும்பலாயிற்று! இந்து மகாசபை ஒரு பச்சை சாதி வெறி பிடித்தலையுங் கூட்டம் என்பது யாவரும் அறிந்ததே. கடைசியில் இந்து மகாசபைக்கே தாவி விட்டார் பாயி பரமானந்தர்.

இந்து சமய வேத மண்டலியா ?

பாயி பரமானந்தருக்கும், சந்த்ராமிற்கும் நல்ல பழக்கமுண்டு.

சந்த்ராம் ஜாட்—பாட்—தோடக் மண்டல். பாயி பரமானந்தர் இந்து மகாசபை. அச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தவேண்டி, ஒரு பெரிய பணமூட்டை முனைந்தது அப்பணமூட்டை, யார்? சேட் ஜுகல் கிஷோர் பிர்லா! — என்பாரே அப் பணமூட்டை.

அவர் பத்தாயிர ரூபாய் பணத்தை, பாயி பரமானந்தர் மூலமாகக்காட்டி, சந்த்ராமை, அவரது சங்கத்தின் பெயரை, 'ஜாட்—பாட்—தோடக் மண்டல்' என்பதிலிருந்து, 'இந்து-சமய-வேத-மண்டலி' என மாற்றும்படி 'பகீரத'ப் பிரயத்தனப் பட்டார் பிர்லா!

ஆனல் சந்த்ராம் பணத்தைத் துச்சமாகத் தள்ளி, பெயரை மாற்றாது ஜாட்-பாட்-தோடக் மண்டல் என்றே அழைத்து, கொள்கையிலுள்ளப் பற்றையும், உறுதியையும் நிலை நாட்டினர்.

ஆரிய சமாஜ மேடை !

துவக்கத்தில், ஜாட்-பாட்-தோடக் மண்டலத்திற்கு மேடை கிடைப்பது முயற்கொம்பாய் இருந்தது. அதுபோது ஆரிய சமாஜம் ஓரளவு ஆதரவு நல்கி வந்தது.

சாதியைச் சாடுவதற்கென்றே பிறந்தது ஜாட்-பாட்-தோடக் மண்டல் சாதியைச் சாடுவது, ஆரிய சமாஜத்தின் கொள்கையாயில்லாவிடினும், சகிப்புடனும், தாராள சிந்தையுடனும், சந்த்ராம் கழகத்திற்கு மேடை அளித்தார்கள்.

ஆனல் சில ஆண்டுகளில், ஆரிய சமாஜத்தின் ஆதரவுச்சிந்தை, மதவெறி காரணமாக, மங்கத் தொடங்கி, கடைசியாக சந்த்ராமிற்கு மேடை ஒதுக்குவது, மறுக்கப்பட்டே விட்டது. மேடை மறுப்போடு, எதிர்ப்பும் கிளம்பிவிட்டது. ஜாட்——பாட்—தோடக் மண்டலுக்கும், ஆரிய சமாஜத்திற்கும், அதிலிருந்து மோதல், இடி, மழை, புயல் எல்லாம்.

சந்த்ராம், ஜாட்-பாட்-தோடக் மண்டல், சார்பாக நடத்திய 'கிராந்தி' என்ற உருது மொழிப் பத்திரிகையை ஆரம்பத்தில் ஆதரித்த ஆரிய சமாஜக்காரர்கள், பகிஷ்கரிக்கவும் முனைந்தார்கள்.

ஜாட்—பாட்—தோடக் மண்டல், அங்கத்தினர்களும், ஆதரவாளர்களும், அசல் 'அன்னக்காவடி'கள். பைசா கிடையாது பையில்; ஆனல் கொள்கையில் திடசித்தமுடையவர்கள். தீவிர வாதிகள்.

எதிரிகளோ பணம் படைத்தச் சீமான்கள், அதுபோது அவர்களது எதிர்ப்பும், சந்த்ராமின் திகைப்பும் எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

சந்த்ராமிற்கு ஏழை என்ருல் இரக்கம் அதிகம்! அது இன்று கூட அவர்பால் பிரியா நிற்கிறது எவ்வெவ் வகையிலேயோ தம்மை அண்டி வந்தவரை, வருவோரை, ஆதரவு காட்டியே அனுப்புகிருர்.

'திருவேடம்'

அவர் எப்போதும், தீண்டப்படாதவர், தீண்டக் கூடிய கடைசாதி சூத்திரர்கள், ஆகியோர் பக்கம் நின்று அவர்களது உரிமைக்காக போராடுபவர்.

ஜாட்—பாட்—தோடக் மண்டல் மேடையேறி பலப் பலர், பிறப்பால் உயர்வு, தாழ்வு, கற்பிக்கும் கயவர்களை, சாதிச்செருக்கு படைத்த அத்தனை சாதி இந்துக்களையும் தாக்கு தாக்கு என்று தாக்கி இடி முழக்கஞ் செய்தார்கள் சந்த்ராம் முதற்கொண்டு, கடைசி தொண்டன் ஈருக.

அவர்களது, அக்கத இடிமுழக்கம், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் மண்டையைக் குடைந்தெடுத்தது.

லஜபதிராய்-சந்த்ராம் லடாய் !

லாலா லஜபதிராய் ஒரு பெரிய தீவிர அரசியல் வாதி. பாஞ்சால சிங்கம் என்ற புகழ்ப் பட்டம் பெற்றவர். வெள்ளையன் குண்டாந் தடிக்குப் பலியான தேசத்தியாகி.

அவர் 'வந்தேமாதரம்' என்ற உருது மொழிப் பத்திரிகையை நடத்திவந்தார். அதில் சந்த்ராமை 'விளாசி' யெடுத்தார்.

சந்த்ராம் கீழ்சாதி மக்களை. மேல்சாதி 'மகான்'களோடு ஏவிவிட்டு, நாட்டில் அமைதியைக் கெடுக்கிருர்—அதோடு புனித இந்து மதத்தை நாக்கில் நரம்பின்றித் தூற்றச் செய்து, இந்துக்களின் மனதைப் புண்படும்படிச் செய்கிருர்!—என்ற குற்றங்கள் சாட்டி, வெளு வெளு என்று வெளுத்துக் கட்டி—சந்த்ராமைத் தாக்கி 'வந்தேமாதர'ப் பத்திரிகையில் கனல்தெறிக்க எழுதி விட்டார். ஜாட்-பாட்-தோடக் மண்டலுக்கே உலை வைக்கப் போவதாகவும் பயமுறுத்தல் பல முனையிலிருந்தும் கிளப்பி விடப்பட்டது.

சந்த்ராம் சளைத்தவரா? லாலாவிற்கு மறுப்பு எழுதத் தெரியாதவரா! அவரிடத்தில் அதற்கென்று பத்திரிகைதானில்லையா? அறைந்தார் ஆணி! அழுத்தமான ஆப்பு! லஜபதிராயின் குற்றச் சாட்டுகளுக்கெல்லாம் அசைக்க முடியாத ஆதாரங் கொண்டு, அவரது 'கிராந்தி' பத்திரிகை வாயிலாக மறுப்பு விடுத்தார்.

மீண்டும் சலசலப்பு!

மீண்டும் ஆப்பு!

ஆப்பு—சலசலப்பை வென்றது! அடங்கினர் கடைசியில் லஜபதிராய்! வெற்றிக் கொடி தூக்கினர் சந்த்ராம்!

இராமேஸ்வரி நேரு அம்மையார் --மண்டல் தலைவி !

தோழியர் இராமேஸ்வரி நேரு அம்மையாரும் ஜாட்-பாட்-தோடக் மண்டல் தலைவியாய் அமர்ந்து பணியாற்றி, அக்கழகத்தைச் சிறப்பித்திருக்கிருர்.

அம்மையார் அக்கழகத்தின் தலைவியாய் இருந்த போது, சந்த்ராம் மீது ஒரு குற்றச்சாட்டு. சந்த்ராமின் தோழர்களாலேயே தாக்கல் செய்யப்பட்டது! அது என்ன!

ஹைதராபாத்தில் மத மாற்றம் :

முஸ்லிம் மக்களின் இடைவிடா எதிர்ப்புக் கிளர்ச்சிகளும், வகுப்புக் கலவரங்களும், அதன் விளைவாகத் தோன்றிய துண்டாடப்பட்ட இந்தியாவும் எதனல்! சந்தேகமற இந்து மதத்தில் காணப்படும் புரையோடிய சாதிபாகுபாட்டுச் சனியனல்தான்—என்னும் அபிப்பிராயங் கொண்டவர் சந்த்ராம். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் என்பவைகளுக்கெல்லாம் மாபெருந் தடைக்கல்லாய் வாய்த்தது சாதி முறைக் கொடுமையே எனச் சாடுவார்.

ஹைதராபாத்தில், தீண்டப்படாத தாழ்ந்த இனமக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவலானர்கள்.

அது போருதா? இந்து 'பிரங்கிகள்' அத்தனையும் நிஜாம் மன்னரை நிந்தித்து, ஏசினர்கள், கடிந்தார்கள்

நோய் முதல் நாடி கண்ட நல்ல மருத்துவராம் சந்த்ராம். தாழ்ந்த இனமக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவுகிருர்களென்ருல் நிஜாம் மன்னரை நிந்தித்து யாது பயன்?—என எடுத்தார் தம் பேனவை! தீட்டினர் தலையங்கம் 'கிராந்தி' இதழில்! என்ன அது!

தாழ்ந்த இன மக்களை மிருக இனத்திலும் கீழ்த்தரமாக மதித்துக் கொடுமை பல புரிய சாதி இந்துக்களுக்கு இடங் கொடுத்த, இந்துமதச் சாதி பாகுபாட்டை யல்லவோ இழித்தும் பழித்தும் பேச வேண்டும்! எய்தவனை விடுத்து அம்பை நோவதா!—என்கின்ற வேகப் போக்கில் 'கிராந்தி'யில் தலையங்கம் தீட்டி விட்டார். நிஜாம் மன்னருக்கு மனங் குளிர்ந்திருக்கும்! மதம் மாறிய தாழ்ந்த இன மக்களுக்கு உள்ள உரம் ஏறி யிருக்கும்!

ஆனல் அவரது கழகத் தோழர்களோ, அதைக் கண்டு கடுஞ்சீற்றமுற்றுப் போயினர்கள்.

நிஜாம் மன்னரிடம் கைக்கூலி பெற்றே சந்த்ராம் அவ்வாறு எழுதி யிருக்கக்கூடும்!—என்று நிந்திக்கலானர்கள்.

இங்கே ஒரு சந்தேகம் எழலாம்! ஜாட்-பாட்-தோடக் மண்டல்தான் இந்துமத வைரி ஆச்சே! இந்து மதத்தைத் தாக்கி யெழுதினல் சீற்றம் ஏற்றுக்கு!—எனக் கேட்கலாம். தாழ்ந்த இன மக்கள் என்ன இருந்தாலும் இந்துக்கள். அவர்கள் கேவலம் துலுக்கன் மதத்தில் சேருவதா! — இதுதான் இக் காழ்ப்பு சந்த்ராம் தோழர்களுக்கு! இப்போக்கையும் சேர்த்து ஒழிப்பதற்குத்தான் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகவும் பாடுபடலானர் சந்தராம். அது நிற்க.

தோழர்களின் நிந்தனை, குற்றப் பத்திரிகை வடிவெடுத்து. சந்த்ராம் குற்றக் கூண்டில் ஏற்றப் பட்டார். ஜாட்-பாட்-தோடக் மண்டல் சபையில், நீதிபதி—இராமேஸ்வரி நேரு அம்மையார் முன்னிலையில் விசாரணை நடந்தது. தீர்ப்பு?

நாற்றமெடுத்த இந்து சமூகத்தின் அவல நிலையைக் கண்டு வெதும்பிய உள்ளத்தினின்று வெளிக் கிளம்பிய எண்ண அலைகளே சந்த்ராமின் 'கிராந்தி' பத்திரிகையில் எழுதப்பட்டத் தலையங்கக்கருத்துகள் ஆகவே குற்றச்சாட்டு பொருத்தமன்று! — என நல்லதீர்ப்பு வழங்கியதோடு அறிக்கையும் விட்டார் இராமேஸ்வரி நேரு!.

சந்த்ராம் இல்வாழ்க்கை :

சந்த்ராம் கல்லூரிப் படிப்பை முடிந்ததும், கங்காதேவி அம்மையார் என்னும் தோழியரை மணந்தார்.

சந்த்ராமிற்கும்—கங்காதேவி அம்மையாருக்கும் இரு குழந்தைகள் பிறந்தன. முதல் ஆண் குழந்தைக்கு வேதபாரத் என்றும், இரண்டாம் பெண் குழந்தைக்கு கார்க்கி என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

பல வாண்டுகள் இன்பத்துடன் இல்வாழ்க்கை நடந்து வந்தது. ஆனல் 1924ஆம் ஆண்டு ஓ

ஏனோ கம்பனை நாடுகின்றீர்?

கல்வியிற் பெரியன் கம்பனென்றும்,
கற்பனை வல்ல புலவன்தான்,
எல்லாச் சுவைகளும் இருக்குமொரு
இனிய இராமா யணம்செய்தான்
கல்லா தவரும் நல்லோரும்,
கற்று வல்ல புலவர்களும்;
எல்லாக் கட்சிக் காரர்களும்,
ஏற்றிப் போற்றிப் புகழ்கின்றார்!

ஆரிய குலத்தை உயர்த்தித்தான்,
அருமைத் தமிழரைத் தாழ்த்தியே:
சீரிய வர்ணனை களையெல்லாம்,
செம்மை யாகப் பெய்துவிட்டு;
பாரில் இராமனின் புகழ்பாடி,
பகுத்த றிவினை ஒத்திவைத்து;
அரிய நூலென் றதைச்செய்தான்
அவனும் வள்ளுவர் மரபினனோ?

வால்மீகி முனிவரால் குடியனென,
வர்ணனை செயப்பட்ட இராமனை;
எல்லாம் வல்ல இறைவனென்று,
ஏற்றிப் போற்றிப் புகழ்ந்துமே;
கல்லா மக்களை ஏய்த்துப்பின்,
கற்றவர் தம்மின் கண்பொத்திச்;
சில்லோர் ஆரியர் புகழ்பாடச்,
செய்தான் கம்பன் இராமாயணம்!

தாடகை தமிழ்ப்பெண் முலையறுத்துத்,
தகாத சொற்கள் பலகூறி;
ஓடக் காரனை ஏமாற்றி,
உற்ற நண்பன் போல்நடித்து;
வடவன் இராமன், வாலியெனும்,
வானரர் தலைவனை மறைந்துநின்று
மூடத் தனமாய் அம்பெய்தான்
மொழிவீர் அவனோ இறைவன்தான்!

மனைவியின் மாண்பை அறியாமல்,
மதியின்றிக் காட்டிற் கனுப்பினான்!
நினைவே இன்றிப் பித்தன்போல்,
நெஞ்சம் கலங்கித் துடித்திட்டான்!
இன்னல் வருவதை அறியாத,
இவனும் எப்படிக் கடவுளாவான்?
நன்னூல் பயன்ற புலவர்களே!
நன்கு ஆய்ந்து கூறுங்கள்!

இத்தகு இராமனைப் போற்றிடவும்,
எடுத்து வைத்துக் கூத்தாடவும்,
சுத்த மானம் இல்லாத,
சுயநலக் கூட்டம் உலவுதுகாண்!
சத்திரஞ் சாவடிப் பிண்டங்காள்
சங்க நூல்களைப் பாருங்கள்!
இத்தகு நூல்கள் உள்ளபோது,
ஏனோ கம்பனை நாடுகின்றீர்?

"இளங்கோ"

பேரிடி வந்துற்றது. சந்த்ராமின் அருமை மனைவி 1924ல் காலமாய்விட்டார். கவலை கப்பியவரானார் சந்த்ராம்.

கவலை நிரம்பிய உள்ளத்தோடு கல்லூரியில் வகித்து வந்தப் பதவிகளைக் கைநழுவ விட்டார். அதிலிருந்து சுயமாக புத்தகங்கள் எழுதி வெளியிட்டும், பத்திரிகைகளுக்கு நூற்றுக் கணக்கானக் கட்டுரைகள் எழுதி வழங்கியும், கல்லூரி வினாத்தாள், பரீட்சைத் தாள்களைக் கண் காணிப்பவராகவும் வாழ்க்கை நடத்தலானார்.

மனைவி கங்காதேவி அம்மையார் இறந்த நான்காண்டுகளுக்குப்பின் 1928-ல் தமது ஒரே மைந்தனை வேதபாரத் என்பாரையும் இழந்தார்.

துயரந் தாங்கமாட்டாது. பல நாட்கள் துன்பத்தில் ஆழ்ந்து அவரது நடவடிக்கைகள் ஸ்தம்பித்து விட்டன. ஆனால் காலந்தான் அவரது ஆறாத்துயரத்தைக் கலைத்தது.

1929-ல் மறுமணம் செய்துகொண்டார் சந்த்ராம்.

நான் அவரிடம் சென்றபோது அவர், தம்பாலுள்ள முக்கிய போட்டோக்களையும், ஜாட்-பாட்–தோடக் மண்டல் அறிக்கைகளையும் பெரும் புள்ளிகளின் கடிதக் கற்றைகளையும் எனக்குக் காண்பித்துக் கொண்டே வந்தார்.

முடிவில் ஒரு போட்டாவை என் கையில் கொடுத்து, இவள்தான் எனது முதல் மனைவி, நமது அருமைச் செல்வி கார்க்கியின் தாய் என்றார். அவ்வளவுதான் ஒரே அமைதி! சந்த்ராம் தேம்பும் ஒலி தவிர வேறு எவ்வொலியும் இல்லை. பாவம்! கண்ணீராய் உகுத்து கவலையில் ஆழ்ந்தார்! அப்போது என் நெஞ்சம் பெரியார்—நாகம்மைப் பிரிவைப்பற்றியே நினைந்து சந்த்ராம் உள்ளத்தை அளந்து குலைந்தது!

சந்த்ராமின் திருச்செல்வி கார்க்கி அம்மையாரைப்பற்றி ஒரு வார்த்தை.

கார்க்கி அம்மையார் ஒரு பி. ஏ பட்டதாரி. அவரது கணவனார் திரு. பீமசேன சந்தா என்பாரும் ஒரு பி. ஏ. பட்டதாரி. அவர், கல்கத்தாவில் ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் கம்பனி (His Master's Voice Co.) யில் பணியாற்றுகிறார். அவர்களுக்கு ஐந்து வயது பெண் குழந்தை யொன்றும், இரண்டு வயது ஆண் குழந்தை யொன்றும் இருக்கின்றன. அவர்களது வாழ்க்கை இனிதே கல்கத்தாவில் நடந்து வருகிறது.

கார்க்கி அம்மையார் தமது இளம் பிராயத்தில் தந்தை சந்த்ராமிற்கு பல வகையாலும் தொண்டுப் பணி செய்திருக்கிறார்.

"பங்கி"ப் பெண்களுக்கு ஆதரவு :

பாகிஸ்தான் உதயமாவதற்கு முன்பு, லாகூரில் தெருக் கூட்டுவோரின் பெண் குழந்தைகளுக்கு கல்வி புகட்ட இடம் வேண்டியதா யிருந்தது! கல்வி புகட்டும் பணியை சந்த்ராமின் திருச்செல்வி தோழியர் கார்க்கி அம்மையாரே மேற்கொண்டார்கள்! சாதி இந்துக்கள் எவரும் 'பங்கி'ப் பெண் பாடசாலைக்கு இடமளிக்க மறுத்து விட்டனர். கடைசியில் சந்த்ராம் தம் வீட்டிலேயே இடம் ஒதுக்கித் தந்தார்! ஜாதி இந்துக்கள் ஆரம்பத்தில் சண்டித்தனம் செய்தார்கள் என்ற போதிலும் கடைசியில் சந்த்ராமின் மெய்த் தொண்டை ஏற்றிப் போற்றி எல்லா வகை உதவிகளையும் அளிக்க முன் வந்தனர்,

கார்க்கி கடிதம்

கார்க்கி அம்மையார் மிக அழகுபட ஆங்கிலம் எழுதுகிறார். மாதிரிக்கு எனக்கு வரைந்த ஒரு கடிதத்தைச் சற்று நோக்குவோம் இங்கே :

Dum Dum, Calcutta-28

Dear Mr. T... July 23, 1954.

Very many thanks for your kind letter and the 'Indian Rationalist' which I received quite a long time back. I am extremely sorry that I have not been able to write to you earliar. At first, I Couldn't do so due to our little one's indifferent health as well as my own And then I misplaced your letter and forgot the address. It is only, to-day that I have got your address from father and am writing to you. I hope, therefore, that you wan't mind this delay in writing.

The article on father was indeed very well written and I must thank you for that. I heard about you and read a few of your letter to father also, when I went to see him about two years ago.

It is very nice of you that you went to see father from such a long distance.

Do see us whenever you find an opportunity to come to Calcutta.

I intend going to see father in the middle of September.

With kind regards from us all to you,

Affectionately yours,
(Sd) Gargi

அதாவது :

டம் டம், கல்கத்தா 28,
அன்புள்ள தி...... ஜூலை 23, 19:4.

தங்களது கடிதமும், 'இன்டியன் ரேஷனலிஸ்டு' இதழும் முன்னமே வந்து சேர்ந்தன. மிக்க நன்றி. இக் கடிதத்தை காலத்தே எழுதாமைக்கு மிக வருந்துகிறேன். முதலாவதாக எனது குழந்தைக்கும், அதோடு எனக்கும் உடல்நலமில்லை. அடுத்து தங்கள் கடிதத்தை எங்கேயோ வைத்து விட்டேன். முகவரியும் தெரியவில்லை. இன்றுதான் தந்தையிடமிருந்து தங்களது முகவரியைப்பெற்று இதை எழுதுகிறேன். காலந் தாழ்ந்துவிட்டதை பொருட்படுத்தாதீர்கள்.

தந்தையைப் பற்றிய தங்களது கட்டுரை மிக நன்றாக இருந்தது. அதற்காக எனது நன்றி, இரண்டாண்டுகட்கு முன்பு தந்தையைக் (பஞ்சாப், புரானி பாஸியில்) காணச் சென்றபோது தங்களைப்பற்றிக் கேள்விபட்டேன். தாங்கள் தந்தைக்கு அவ்வப்போது எழுதும் சில பல கடிதங்களை தந்தைக்கு (கண்பார்வை மங்கினமையால்) படித்துக்காட்டியிருக்கிறேன்.

நெடுந் தூரத்திலிருந்து, தாங்கள் தந்தையைக் காணச்சென்றது உண்மையில் மெச்சத் தகுந்ததே.

கல்கத்தா பக்கம் வர வாய்ப்பு ஏற்படும்போது, கட்டாயம் எங்களை வந்துப் பாருங்கள்.

செப்டம்பர் மத்தியில் தந்தையைக்காண (பஞ்சாட்) செல்ல இருக்கிறேன்.

எங்களது கனிவு நிறைந்த வணக்கம்,

தங்களன்புள்ள,
(ஓ-ம்) கார்க்கி,

முடியகற்று விழாவில் சீர் திருத்தம் !

சாதியின் பெயரால் அறிவிற்கு அப்பாற்பட்டச் செய்கைகள் எதுவாயினும் ஆடம்பரத்துடன் நடப்பதா யிருந்தால் அதனை அறவே வெறுத்து ஒதுக்கிடுவார் சந்த்ராம். அவரது குடும்பத்தில் குழந்தைகளுக்கு முதன் முதலில் முடி நீக்குவதாய் இருந்தால் பெரிய ஆர்ப்பாட்ட விழாவாக நிகழும். அம் முறைகளை யெல்லாம் தள்ளி தன் மகனுக்கு சாதாரண ஒரு நாளில், முடிதிருத்தகம் சென்று முடி நீக்கிவிட்டார். இச்சம்பவம் அன்னாருடைய குடும்பத்தாரின் கசப்புத் தன்மையை இவர்பால் உண்டு பண்ணியது. சரி கிடக்கட்டும் தள்ளு!—என்றார் சந்த்ரரம்.

(அடுத்து சந்த்ராம் மறுமணம்!—கன்னி விதவைத் திருமணம்!—கலப்பு மணம்!—மண்டல் தொடர் செய்திகள் எழுதுவோம்).

திராவிடப் பூங்கா

வந்தைவேள்

மங்கா மாமலை வரலாறு.

மங்கா மாமலை என்னுந் தலைப்பில் திராவிடப் பூங்கா-7—10—55. திராவிடனில், மறைமலை அடிகளைப் பற்றிப் படித்தோம்.

அதன் குறிப்புரையில், மறைமலை அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி பிறிதொரு வேளை எழுதுவோம் என்றும் முடித்திருந்தோம். அதற்கிணங்க இப்போது அவரது வாழ்க்கை வரலாற்றைச் சற்று உன்னுவோம்.

மறைமலை அடிகளாரின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள், மாணிக்கவாசகர், தாயுமானூர், இராமலிங்க அடிகள், பட்டினத்தடிகள், திருமூலர், வள்ளுவர் போன்ற சமய ஞானக் குருமார்களும்; இளங்கோ அடிகள், காளிதாசர், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை போன்ற தமிழ் நல்லிசைப் புலவர்களும்; கண்ட், ஹெகால், சாக்ரட்டீஸ், பிளாட்டோ, எச். ஜி. வெல்ஸ் போன்ற தத்துவ ஞானிகளும்; அடிசன், ஷேக்ஸ்பியர், போன்ற ஆங்கில நல்லிசைப் புலவர்களும்; ஸர். ஜான் மார்ஷல், டாக்டர். கால்டுவெல், ரகோஜின், டாக்டர். ஜான்கோவன், வின்ஸன்ட் ஸ்மித், ரிசிவி போன்ற ஆராய்ச்சி வல்லுநர்களுமே ஆவார்கள்.

மறைமலை அடிகளை, தமிழர் மேம்பாட்டையும், அவர்தம் உயர்ந்த நாகரிகத்தையும், சதா நினைக்கத் தூண்டிய நிகழ்ச்சிகள் ஆரியப் பார்ப்பனர்களது விஷமப் பிரச்சாரமும், ஆங்கிலங் கற்று தமிழை மறந்த, இகழ்ந்த, தமிழ்ச் "சீமான்"களின் போக்குமே யாகும்.

அப்படி அவர் தயாரான விதம் எங்ஙனம் என்பதைப் பார்ப்போம்.

மறைமலை அடிகள் பிறந்த ஊர் நாகப்பட்டினம், அவர் 1876-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாளில் பிறந்தார். அவர் சோழியச் சைவ வேளாள குலத்தில் தோன்றியவர், அவரது தந்தையாரின் பெயர் சொக்கநாத பிள்ளை. தாயாரின் பெயர் சின்னம்மை.

மறைமலை அடிகள் படிப்பில் மிக கவனம் உடையவர். நாகப்பட்டினத்தில் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் ஆங்கிலமும், தமிழும் நன்கு பயின்றார். பாடங்களில் முதன்மையாகத் தேறி, பற்பல பரிசுகளைப் பெற்றார்.

அவரது அருந்தமிழுக்கு, தனித்தமிழுக்கு, முதல் முதல் வித்திட்டவர் நாகப்பட்டின புத்தகக் கடை இயற்றமிழாசிரியர் திரு. வெ. நாராயணசாமிப் பிள்ளையாவார்கள்.

அடிகளுக்குப் பதினறு வயது ஆனதும், தமிழ், ஆங்கில நூற்களை அதிகம் பயில அவாவுற்றார். கல்லூரிப்படிப்பு போதாவென்று முடிவுகட்டி விட்டு தனிமையிலேயே பற்பலநூற்கள் பயின்று அறிஞர் ஆனார்,

தமிழறிவும், சமய உணர்வும் பலரிடத்தும் பெருக் கெடுக்க வேண்டி "இந்து மதாபிமான சங்கம்" என்றகழகத்தைத் தோற்றுவித்தார். உழைத்தார்.

உடன், பதினேழாம் வயதில், அவர் சவுந்தரவல்லி என்ற நங்கையரை மணம் புரிந்து கொண்டார்.

அதற்கடுத்த ஆண்டே தம்பதிகளுக்கு பெண் மகவு ஒன்று பிறந்து சிந்தாமணி எனப்பெயரிடப்பட்டது, அவர் பதினெட்டாம் வயதிலேயே பிள்ளைப் பேற்றைப் பெற்றது கவனிக்கற் பாலதாகும்.

அடிகளார் சிறு பிள்ளையாய் இருந்த காலத்தே தந்தையை யிழந்து விட்டார்.

செந்தமிழ்க் கட்டுரைகள் தீட்டுவதில் தனித்திறமை பெற்றார், அதுபோது காரைக்காலில் நடைபெற்ற "திராவிட மந்திரி" என்னும் கிழமைத் தாளும், நாகப்பட்டினத்தில் நடைபெற்ற "நாகை நீலலோசனி" என்னும் கிழமைத் தாளும் அவரது கட்டுரைகளைத் தாங்கி பெருமை கொண்டாடின.

1894ஆம் ஆண்டு, உத்தியோக வேட்டையில் ஈடுபடலானார். அவரது ஆசிரியர் நாராயணப்பிள்ளையின் உதவியால், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டிற்று. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் நாராயணப் பிள்ளையே ஆசிரியராவார்.

மறைமலை அடிகளார், சுந்தரம் பிள்ளை யவர்களைப்பற்றி அகவற்பா ஒன்றுதயாரித்து, சுந்தரம் பிள்ளையிடம் ஓர் அரிய நற்சாட்சிப் பத்திரம் பெற்றார். அதோடு அவரது இளம் வயதிலேயே தமக்குற்ற சிலப்பதிகார, சீவக சிந்தாமணிப் புலமையை வெளிக்காட்டி சுந்தரம் பிள்ளையை மகிழ்வித்தார், வியப்படையச்செய்தார்.

அதுபோது சுந்தரம் பிள்ளை அவர்கள், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் அறிவு நூலாசிரியராகப் பணி புரிந்தார்.

சுந்தரம் பிள்ளையின் செல்வாக்கால், மறைமலை அடிகள், 1896-ஆம் ஆண்டில், திருவனந்தபுரம் மார்த்தாண்டன் தம்பி கல்விக் கழகத்தில், தமிழாசிரியர் பதவியேற்றார்.

இடை இடையே திருவனந்தபுர நகர்தனில், சைவ சித்தாந்த உண்மை விரிவுரைகள் ஆற்றியும் அரசர் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் "நாடகத் தமிழ்" என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சி சொற் பொழிவுரை ஆற்றியும் எல்லோருடைய மனதையும் கவர்ந்தார். சுந்தரம் பிள்ளையின் நன் மதிப்பையும் பெற்றார்.

இரண்டரை மாதங்களுக்குள் அவரது உடல் நலங் குன்றி விட்டதால் தமிழாசிரியர் பணியை விடுத்து நாகை திரும்பி விட்டார் மறைமலை அடிகளார்.

ஆரம்பத்தில் அடிகளார், மாயாவாதவேதாந்தத்தைக்கட்டி அழுதார், பிறகு சென்னை சோம சுந்தர நாயகரவர்களின் சைவ சித்தாந்த உண்மை உரைகளைக் கேட்டு அதற்கே உழைக்க முற்பட்டார். நாளடைவில் சோமசுந்தரரை தமது ஆசிரியராகவும், தந்தைபோலவும் ஆக்கிக் கொண்டார்.

சோமசுந்தரர், மறைமலை அடிகளை, சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த "துகளறு போதம்" என்னும் நூலுக்குத் தமிழுரை எழுதச்சொல்லி, நூல் வடிவில் கொணர்ந்து ஊக்குவித்தார், பிறகு அவரை சென்னைக்கு வருவித்து நல்லாசாமிப் பிள்ளையால் தோற்றுவிக்கப்பட்ட "சித்தாந்த தீபிகை" என்னும் திங்கள் இதழுக்கு ஆசிரியராக ஆக்கினர்.

இவ்வாறு சென்னை வந்த மறைமலை, பல்லாவரத்திலேயே தங்கி, தமது எஞ்சியவாழ்நாளை தமிழுக்காகவும், தமிழரது உயர்விற்காகவும். அரும் பாடுபட்டு, 1950ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் மறைந்தார்.

சென்னைக்கு வந்த பிறகு தான் அவரது வாழ்க்கை அவருக்கு முழுப் பயனை அளித்தது என்னலாம்.

சென்னை கிருத்துவகல்லூரியில் உயர் வகுப்புத் தமிழ்ப் பேராசிரியராய்ப் பதின் மூன்று ஆண்டுகள் பணியாற்றி யிருக்கிறார்.

எண்ணற்ற நூல்களை அயராது எழுதி வெளியிட்டுப் போந்தார்.

அவரது முதல் ஆசிரியரான நாகப்பட்டினம் வெ. நாராயண சாமிப் பிள்ளை யவர்களின் நினைவாக "பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை" என்னும் நூலை சமர்ப்பித்திருக்கிறார்.

இரண்டாவது ஆசிரியரான சோமசுந்தரருக்கு, அவரது மறைவைக் குறித்து "சோமசுந்தரக் காஞ்சி" பாடி நூலாக்கினார். அந்நூலில் குறை இறுத்தார்க்கு மறுப்புரை புகல்வான் வேண்டி "சோமசுந்தரக் காஞ்சியாக்கம்" என்னும் விளக்க நூலை எழுதி வெளியிட்டார்.

"ஞானசாரம்" என்னும் தமிழ்த் திங்கள் வெளியீட்டையும், "ஓரியண்டல் மிஸ்டிக் மைனு"—"The Oriental Mystic Myna" என்னும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டையும் திறம்பட நடத்தினர். அதோடு "தி ஓஷன் ஆஃப் விஸ்டம்"-"The Ocean of Wisdom" என்னும் மாத இருமுறைத்தாளையும் நடத்தினர்.

இவைகளில் எழுதின எழுத்துக்கள் பெரும் பாலானவற்றைத் திரட்டியே, பற்பல அரிய நூல்களாக வெளிக்கொணர்ந்து, தமிழுக்கும், தமிழர்க்கும் தொண்டாற்றினர்.

அவர் வெளியிட்ட நூற்கள் பலவற்றிற்கு ஆங்கில முன்னுரையே அழகு படவும், ஆழமான கருத்துக்கள் அடங்குவன வாகவும், அழுத்தமாகவும் எழுதியிருக்கிறார். அவைகளைப் படிக்கப் படிக்க இன்சுவை கூட்டா நிற்கிறது. யாம் இது காறும் படித்த, மறைமலை அடிகள் எழுதிய இருபத்தைந்திற்கும் மேலான நூல்களுள், ஆங்கில முன்னுரை அதிகம் பக்கம், அதாவது 55 பக்கங்கள், எழுதியதைக் கண்டது 'தமிழர் மதம்" என்னும் நூலிலேயாம். அதுவே ஒரு அருமை வாய்ந்த தனி நூலாகக் காட்சியளிக்கிறது, அவரது ஆங்கிலப் புலமையே புலமை என வியக்கச் செய்கிறது! அதன் பின்னர் 'தமிழ் மதம்' என்னும் ஆராய்ச்சி நூல் ஓடுகிறது313 பக்கம் வரை! தமிழ்ப்புலமையின் ஆழமே ஆழம் என பிரம்மிக்கச் செய்கிறது! அதில் கூறியுள்ள கருத்துகளை தமிழ்நாடு தேய்ந்து மறையும் வரை வேண்டற் பாலதான கருத்துக் கருவூலமாகத் துலங்குகிறது! இப்படிக் கூறுவது அவர் இயற்றிய அத்தனை நூலுக்கும் பொருந்துமென்றால் மிகையல்ல வேயல்ல.

அவர் அப் புத்தகங்களை வடித்தெடுக்கப்பட்ட பாடு எம்மட்டு? அம்மம்ம! அளப்பறகரிது!

பல்லாயிர ரூபாய்களுக்கு அவரே அவ்வப்போது பற்பல நூல்களை வாங்குவார். வாங்கி ஆராய்ந்து படித்தான பின்பு அழகாய் ஒவ்வொன்றுக்கும் விடாமல் அட்டை போட்டு அலமாரியில் அடுக்கிவைப்பார், அப்படி அருமையாய் சேமித்த புத்தகங்கள் அரை இலட்சத்திற்கும் மேலேயிருக்கும். அவை இன்று தமிழ் மக்களுக்குப் பயன் படும்படிச்செய்வது தக்கார்கடன் எனக் கூறுவோம்.

அவரது குரலோசையைநம்மில் பல்லோர் கேட்டிருப்போம். அவர் 'கீச்சுக்' குரலில் பேசும் இயல்பினர். ஆனல் இனிமையாகவும், தெளிவாகவும், வேகம் நிறைந்ததாகவும்இருக்கும் அவரது'கீச்சுக்' குரல் சொற்பொழிவுகள்.

"சுவாமி வேதாசலம்" என்ற பெயரைத் தனித்தமிழில் மறைமலை அவர்கள் என்று மாற்றிக் கொண்டார்.

மறைமலை அடிகள் ஒரு கலைக் களஞ்சியம். அது இன்று அவர் அளித்துச் சென்ற நூல்கள் வடிவில் உள்ளது. அக் களஞ்சியத்தை அனுபவித்து பயனுற வேண்டியது தமிழர்களின் தலையாய கடனுகும், ஓங்குக மறைமலையின் புகழ்!

முடிவுரை: முன்னைய கட்டுரையில் அவரைப்பற்றி பல குறிப்புகள் எழுதி விட்டமையால் இது சுருக்கி எழுதப் பட்டதாகும்.

திராவிடன்

சென்னை : 18-11-55 : வெள்ளி

"தீபாவளிக் கூத்து இராசேந்திரரின் பாட்டு!"

●

இந்திய சர்க்காரின் ஜனாதிபதி டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள், இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகையை சென்னையில் கொண்டாடுவதென ஆசைப்பட்டதற்கேற்ப தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்!

தமிழகத்திற்கு வருகை தந்த குடியரசுத் தலைவருக்கு, தலைநகரில்—கவர்னர் மாளிகையில் தீபாவளி விருந்து மிகப் பிரமாதமாக நடைபெற்றதாம். விருந்துண்ட ராசேந்திரர், கம்பரசத்தையும் பருக ஆசைகொண்டு, ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கம்பர் மாநாட்டினை துவக்கிவைத்திருக்கிறார். அதுபோது அவர் கம்பனின் கவித்திறமையையோ அல்லது ராமனின் வீரப் பிரதாபங்களையோ கொட்டி அளந்திருந்தால் நாம் ஒன்றும் அதைக்குறித்து ஆச்சரியப் பட்டிருக்க முடியாது,

ராமாயணம்—ஆரிய திராவிடர் போராட்டத்தை எடுத்துக் காட்டும் வரலாறாகும் என்று ஏட்டிலே திட்டவட்டமாகத் தீட்டியவரும், முற்போக்குவாதி எனச் சொல்லிக் கொள்பவருமான நேரு பண்டிதர் அவர்களே ராம விழாக் கூத்தில் கலந்து கொண்டு கும்மாளம் அடிக்கிறாரென்றால், இராசேந்திர பிரசாத் அவர்கள் கம்பர் மாநாட்டில் இராமநாம மகிமையை எடுத்துரைப்பது தவறாகாதல்லவா!

ஆனால், குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத் அவர்கள்—கம்ப ரசத்தைப் பருகிய மயக்கமோ அல்லது தீபாவளி விருந்தின் விளைவோ தெரியவில்லை—அவ்விழாவில், இந்தித் திணிப்பைக் குறித்து தமது ஆட்சி பீடத்தின் பத்தினித்தனத்தை வெளியிட்டிருக்கிறார்!

வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்து சுற்றிச் செல்லும் நேரு பண்டிதர் போன்றவர்கள் பேசும் பாணியிலேயே குடியரசுத் தலைவர் இராசேந்திரரும் கொட்டி அளந்திருக்கிறார்!

"நான் இந்திமொழி பேசுபவன். இந்திமொழி பிரச்சாரத்தில் ஒரு சமயம் தீவிரமாக ஈடுபட்டுமிருக்கிறேன். ஆனால் தமிழுக்கோ அல்லது இதர வட்டார மொழிகளுக்கோ எதிராக இந்தியைத் திணிக்கும் உத்தேசம் வடநாட்டவருக்கு இல்லை. முட்டாள்தனமாக யாராவது வட்டார மொழிகளின் இடத்தை இந்திக்குப் பெற்றுத்தர முற்படுவார்களேயானால் அது நடக்காது என்பதை விரைவில் உணர்வார்கள், நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். தமிழ் நாட்டில் இந்தியைத் திணிக்கும் அளவுக்கு நாங்கள் அவ்வளவு முட்டாள்களல்ல,"

என்பதே—இராசேந்திரர், கம்பர் விழாவிலே அந்த ரசத்தைப் பருகிக்கொண்டே பேசிய வார்த்தைகளாகும்!

வடநாட்டு ஆதிக்க பீடத்தினர் பேசும் இவ்வித பேச்சுக்களையும் அதேசமயத்தில் அவர்களின் செயலில் உள்ள வேறுபாடுகளையும் திராவிட முன்னேற்றக் கழகமும் கல்வித் துறை நிபுணர்களும் அதிகாரிகளுங்கூட அவ்வப்போது இடித்துக் கூறிவருகின்றனர் எனினும் வட நாட்டினர் மட்டும் கீறல் விழுந்த இசைத்தட்டுபோல ஓயாமல் தங்களின் வாய்ச்சவடாலைக் காட்டுவதில் வெறிகொண்டு அலைகின்றனர்.

தென்னாட்டின்மீது இந்தியைத் திணிக்கும் அளவுக்கு வடநாட்டினர் அவ்வளவு முட்டாள்கள் அல்ல என்று வீம்பு பேசும் குடியரசுத் தலைவர் இராசேந்திரர் அவர்களைப் பணிவன்புடன் கேட்க விரும்புகிறோம்.

ரஷ்யநாட்டுப் பிரதமர் புல்கானின் சென்னை வரும்போது அவருக்கு சென்னை நகர சபை இந்தி அல்லது ரஷ்ய மொழியில்தான் வரவேற்பு இதழ் வாசித்தளிக்க வேண்டும், என்று இந்திய சர்க்கார் உத்திரவு போட்டிருப்பதை எதற்கு ஒப்பிடுவது? ராசேந்திரர் இதற்கு என்ன பதில் கூறுவார்!

இந்திய தேசிய மொழிகளில் தமிழும் ஒன்று, அதற்கு எவ்வித தாழ்வும் கிடையாது. என்று நாள்தவறாது தப்பட்டை அடிக்கும் இந்தியப் பேரரசினர் ரஷ்ய நாட்டுப் பிரதமருக்கு, அதுவும் தமிழகத்தின் தலைநகரில், தமிழ் மொழியில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கக் கூடாதென்று கட்டளை பிறப்பிப்பது எவ்வளவு கடைந்தெடுத்த ஆதிக்க வெறியாகும் என்பதை இந்த சமயத்திலாகிலும் கனம். ராசேந்திரர் போன்ற தலைவர்கள் சிந்தித்துப் பார்க்காமல் தென்னாட்டின் மீது இந்தியத் திணிக்கும் எண்ணமில்லை யென்று பசப்புவதில் நல்ல எண்ணமோ அரசியல் விவேகமோ இருக்க முடியுமா என்று வணக்கமுடன் கேட்கிறோம்.

அண்மையில், இந்தியப் பிரதமர் ரஷ்யநாட்டுக்குச் சென்றிருந்தபோது, "சாமர்கண்ட்" என்ற இடத்தில் உருது மொழியில் வரவேற்பு கொடுத்ததாகவும், நேரு பண்டிதரும் அதை மனதார ஏற்று உருதுவிலேயே பதில் சொன்னதாகவும் செய்தி வெளிவந்திருக்கிறது. ரஷ்ய மொழியில்தான் வரவேற்பு கொடுக்க வேண்டுமென்றோ அல்லது பேசவேண்டுமென்றோ கட்டாயப் படுத்தப்படவில்லை. அங்கு கண்ட இந்நிகழ்ச்சிக்குப் பிறகும் இந்தியப் பேரரசு, தமிழ் நாட்டில் தனது மொழி ஆதிக்கத்தைக் காட்டத் துணிவதை மானமுள்ள தமிழர்கள் எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும் என்று கனம் ராசேந்திர பிரசாத் அவர்களை சிந்திக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்,

சமீபகாலமாக, வடநாட்டு ஆதிக்கம் மொழித்துறையில் தனது கைவரிசையைக் காட்டுவதில் தலைவிரிகோலம் போட்டுவருகிறது. இந்த அநீதியை மறைப்பதற்காக, நேரு பண்டிதர்கள், தென்னாட்டின்மீது இந்தியை திணிக்கமாட்டோம் என்று கூச்சல்போட்டு வருகின்றனர். இந்த நேர்மையற்ற போக்கினைக் கண்டித்து தி.மு.கழகம் உள்ளிட்ட மற்ற நிருவனங்களும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எ, லட்சுமணசாமி போன்றவர்களும் அவ்வப்போது அறிவுரை கூறியும் வடநாட்டு ஆதிக்கம் திருந்தியபாடில்லை,

இந்நிலையில், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் அவர்களாகிலும் நடைமுறையில் தென்னாட்டினருக்கு நீதி வழங்குவார் என்றும் ஓரளவு அதற்கேற்ப வட நாட்டு ஆதிக்கக் கும்பலுக்கு அறிவுரை கூறுவார் என்றும் கொண்டிருந்த நம்பிக்கைக்கு மாறாக, அவரும் அர்த்தமற்ற உபதேசத்தை செய்ய முனைந்திருப்பது கண்டு மிகவும் வருந்துகிறோம்.

●

தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்
18—12—55 அன்று குடந்தையில் கூடும்

—தி. மு. க. தலைமை நிலையம்

நடக்க இருப்பவை

மாயவரம்

மாயவரம், கூறைநாடு ஆசிரியர் வேலாயுத மன்றத்தினர் கட்டிட நிதிக் குழுக்கூட்டம் 19—11—55 சனி மாலை 5-மணிக்கு மேற்படி மன்ற கட்டிடத்தில் நடைபெறும். நிதிக்குழு உறுப்பினர்கள் நன்கொடை புத்தகத்துடன் கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவிக்கிறார்.

*

மாயவரம் நகர தி, மு கழக செயற்குழுக் கூட்டம் 20—11—55 ஞாயிறு காலை 9-30மணிக்கு ஆசிரியர் வேலாயுத மன்றத்தில் நடைபெறும், செயற்குழுவினர் அனைவரும் கலந்து கொள்ளக் கோருகிறோம், என செயலாளர் என், கிட்டப்பா அறிவிக்கிறார்,

சென்னை புளியந்தோப்பு

18-வது வட்ட தி, மு, கழக பொது உறுப்பினர் கூட்டம் நவம்பர் மாதம் 20-ந்தேதி ஞாயிறு காலை 10 மணியளவில் கழக பணிமனையில் (5[4, பார்த்தசாரதி நாயுடு தெரு, புளியந்தோப்பு) நடைபெறும்.

ஓட்டேரி

திரு. வி. க, மறுமலர்ச்சி மன்ற சார்பில் ஸ்ட்ரான்ஸ் ரோடு பகுதி (19-வது வட்டம்) லட்சுமி டாக்கீஸ் அடுத்த மேற்படி மன்ற மனையில் சொற்பயிற்சிக்கூட்டம் 20—11—55 அன்று காலை 9-30 மணிக்கு தோழர் அன்பானந்தன் தலைமையில் "சிந்தனையும் செயலும்" எனும் பொருளை ஒட்டி நடைபெறும்.

சைதை

சென்னை சைதாப்பேட்டை 47-வது வட்டத்தைச் சேர்ந்த கண்ணம்மா பேட்டை, பல்லவ நகர். சி. ஐ. டி. நகர், தெற்கு தியாகராய நகர் முதலிய பகுதிகளிலிருக்கும், தி, மு, கழக அனுதாபிகளும் ஆதரவாளர்களும், 47-வது வட்ட தி, மு. க கிளை துவக்குவதற்காக 20—11—55 ஞாயிறு மாலை சுமார் 4 மணிக்கு சைதாப்பேட்டை - ஜோன்ஸ் ரோடு 155-ம் எண்ணுள்ள இல்லத்தில் கூடும் அமைப்புக் குழுவில் கலந்துக் கொள்ள வேண்டப்படுகிறார்கள்,

சேலத்தில் சிறப்புக் கூட்டம்

20—11—55 ஞாயிறு காலை 10 மணிக்கு சிதம்பரேஸ்வராவில் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார். நன்கொடை அணா 8. 4. அனைவரும் வருக

—நகர தி. மு. க, சேலம்

திருச்செங்கோடு

21-11-55 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நாற்பதுகால் மண்டபத்திற்கு முன் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் எ. நடேசன் அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா பேசுவார்.

சேலம் மாவட்டத்தில்
அறிஞர் அண்ணா
சுற்றுப்பயணம்

○

20—11—55 காலை : சேலம்நகரம் — சிறப்புக்கூட்டம்; மாலை : ஓய். எம். சி. ஏ. திடலில் கல்லூரி மாணவர்கள் வரவேற்பு; இரவு : பொதுக்கூட்டம்

21—11—55 காலை : மொரப்பூர்— திருமணம்; மாலை : எடப்பாடி— பொதுக்கூட்டம்; இரவு : திருச்செங்கோடு—பொதுக்கூட்டம்; மேட்டூர் அணை—நாடகத் தலைமை

22—11—55 மாலை ; பாண்டமங்கலம் —பொதுக்கூட்டம்; இரவு : நாமக்கல்—பொதுக்கூட்டம்

23—11—55 காலை : நீர் முள்ளிக் குட்டை—பொதுக்கூட்டம்; மாலை : ஆனையாம்பட்டி—பொதுக்கூட்டம் ; இரவு : ஆத்தூர்—கே. ஆர், ஆர். நாடகத் தலைமை.

அண்ணா அவர்களும் பொதுச் செயலாளரும் புதுவை வருகை

27-11-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில் புதுவைத் தி. மு.கழக வட்டக்குழுச்சார்பில் அறிஞர், அண்ணா பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்படும். என புதுவை தி, மு. க. வட்டக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

காங்கிரஸ் - சுயநலக் கூட்டத்தின் வேட்டைக் காடாக மாறி வருகிறது.

பம்பாயில் தோழர் தங்கப்பழம் அவர்களின் முழக்கம்

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம்—தாராவி கிளையின் 6ம் ஆண்டு நிறைவு விழா, தாராவி—வ. உ. சி. திடலில் 2—11—55ம் நாள் நடைபெற்றபோது, "கிளர்ச்சி" ஆசிரியர் இரா. சு தங்கப்பழம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்:—

★

தலைவர் அவர்களே! பொதுமக்களே! பம்பாய்—தாராவி திராவிட முன்னேற்றக் கழகம் 6ம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியமைக்கு மகிழ்கிறேன். பம்பாயில், தி. மு. கழகம் ஒரு குடும்பம் போன்று வளர்ந்து வருவது கண்டு பூரிக்கிறேன். இதற்கிடையில் தமிகழத்திலிருந்து 1000 மைல்களைக் கடந்து வந்து பொய்ப் பிரச்சாரங்கள் செய்து, தனக்கு மாறுபட்டவர்களிடை நிலவி வரும்ஒற்றுமைக்குப்பங்கம் விளைவிக்கும் வகையில் சிலர் பேசிச்செல்வது வருந்தத் தக்கதாகும். சில தினங்கட்கு முன், வள்ளிமுத்து என்னும் நபர், இங்கு—தாராவிப் பகுதியில் வந்து பேசியதாகவும், அவரின் பேச்சைக்கேட்டு 4000 தி. மு, க. தோழர்கள் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதாகவும் ஒரு செய்தி படித்தேன். அது எத்தனை பித்தலாட்டத்தனமான செய்தியென்பதை பம்பாயில் வாழும் நீங்களே அறிவீர்கள். 25 ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்திலிருந்து, பெருந் தீவிர வாதியாக இருந்து, அங்கு கட்சியினுள் ஏதேனும் களங்கம் கண்டு அதன் காரணமாய் இந்த வள்ளிமுத்து கழகத்தை விட்டு விலகியிருந்தால், அவரைத் தொடர்ந்து ஒரு சிலராவது சென்றிருக்க வேண்டும். இவ்வித முறைதான், ஒருவர் குற்றங் கண்டு விலகி வெளியேறியது எனக் கொள்ளப்படும்.

அதற்கு மாறாக இவர் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்ட முடியும் என்றால், இவர்பேரில் நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்ததே ஒரு எடுத்துக் காட்டாகும். அப்படியே, அவர்தான் விலகிக்கொண்டாரென்றால், கழகம், கலகலத்தோ, சலித்தோ போய் விடுமன்வில் அவரொன்றும் அங்கு. அஸ்திவாரக் கல்லாகவோ, தூணாகவோ அன்றிக் கோட்டையாகவோ இருந்துவிடவில்லை ஏதாவது பொருட்களை வைப்பதற்காக மூலைகளிலே போடப்பட்டிருக்கும் "சும்மாடு" போன்று இருந்த இவர், இன்று இல்லை என்பதால் அங்கு எந்தச்சேடும் வந்துவிடவில்லை. மாறாக இன்றுதான். இம்மாதிரியானவர்களெல்லாம் அங்கு இல்லாததால், நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது கழகம்.

காங்கிரசில் சேர்ந்துவிட்டால் தனக்குப் பெரும் செல்வாக்குக ளெல்லாம் கிடைத்துவிடும் என எதிர்ப்பார்த்துத் தான் அங்கு சென்று சேர்ந்தாரேயொழிய அவர் எண்ணியது போன்று எதையும் அவர் அடைந்துவிடவில்லை. ஏதோ புதிதாககழகத்திலிருந்து பிரிந்து வந்தவர் என்பதற்காக, பேசுவதற்குச் சில மேடைகள் கிடைத்தனவேயொழிய சில நாட்களிலேயே நீண்டுவாரில்லாது போய்விட்டார்.

இன்று நாட்டில் உருவாகியுள்ள கட்சிகளில் பெரும்பாலும், முதன் முதலில் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி வந்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டவையே. இப்படியிருக்க, புதிய கட்சியிலிருந்து இன்று விலகி முன்னரே புறக்கணிக்கப்பட்ட பழைய கட்சியில் சேருவது வள்ளிமுத்துப் போன்றோரின் பிற்போக்கைத்தான் காட்டுகின்றது. கட்சிக் கொள்கைகளில் தவறு காண முடியாத இவர், ஏதேதோ பீத்துகிறாம்! அவைகளைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை;

★

ஏனெனில் 5-ஆண்டுகளாக நாம் பல கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டது மட்டுமல்லாமல் நாம் பொதுமக்களிடமிருந்து திரட்டிய நிதியைக் கொண்டு தலைநகரில் கழகத்திற்கென தலைமை நிலையம்—அறிவகமும்—கழக வளர்ச்சிக்கென 'நம் நாடு'—தினசரி ஏடும் ஏற்படுத்தினேம் என்பதைப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள். அத்துடன் அண்மையில் கூட நமக்கென பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்காக, பெரிய மைதானம் ஒன்றைச் சொந்தமாய் வாங்கியுள்ளோம் என்பதை இந்த நேரத்தில் உங்கட்குக் கூறிவைக்க வேண்டியது எனது கடமையாகும்.

ஆயிரம் சலசலப்புகள் நடந்து வரும் காங்கிரசில்; தான் சேர்ந்து கொண்டுள்ள காரணத்தால் அது அரும் பெருங் காரியங்களைச் சாதித்து வருவதாய்க் கூறினராம். அந்த வள்ளிமுத்து!

உதாரணத்திற்காக—உங்களில் அநேகர் திருநெல்வேலிக் காரர்களாயிருப்பதால்—திருநெல்வேலி ஜில்லாக் காங்கிரஸ் பற்றிக் கூறுகிறேன். கடந்த தேர்தலின் போது தனக்கும் — மேகநாதன் என்பவர்க்கும் ஏற்பட்டதகராறுகளால், டில்லி பீடத்திலிருந்து ஆறு ஆண்டுகட்கு ஓட்டுச் செய்ய முடியாதபடி தனது ஓட்டுரிமையைக்கூட பறிகொடுத்து விட்ட கோசல்ராம் என்பவர் திருநெல்வேலி ஜில்லாக் காங்கிரஸ் தலைவர் தற்போது நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் சிவசுப்பிரமணியம் என்ற காங்கிரஸ்காரரை எதிர்த்து கார்த்திகேயன் என்பவர் சுயேச்சையாகப் போட்டியிட்டதில். வெற்றி பெற்ற கார்த்திகேயனுக்கு மேற்கூறிய ஓட்டுரிமையில்லாத காங்கிரஸ் தலைவரின் ஆதரவு கிட்டியிருந்ததாகக்கூறப்படுகிறதென்றால், இவற்றையெல்லாம் அவ்வப்போது கேள்விப்படுத் தெரிந்து கொண்டுள்ள நம்போன்றோர் மத்தியில் இந்த வள்ளிமுத்துக்கள் வந்து காங்கிரஸ் அரிய பெரியன சாதிக்கின்றது என்று கூறுகின்றார்கள் என்றால் அவற்றில் ஏதேனும்பொருளிருக்க முடியுமா?

இதுபோன்று காங்கிரஸின் மேலிடங்களிலும் பலவிதக் கோளாறுகளை நம்மால் சுட்டிக்காட்ட முடியும். பதவி ஆசைக்காகவும்; போட்டி மனப்பான்மையாலுந்தான் இவ்வாறெல்லாம் காங்கிரஸ் நடந்து கொள்கின்றது என்றால், ஆட்சி முறையிலாவது ஊழல்கள் இல்லாதிருக்கின்றதா?

சாதாரண வியாபாரிகூட புரிந்து கொள்ளக்கூடிய ஒரு காரியத்தை, சர்க்காரால் புரிந்துகொள்ள முடியவில்லை, 100 பவுன்களை மூலதனமுள்ள கம்பெனிக்கு 1000 ஜீப்கார்கள் ஆர்டர் கொடுத்து, அவை வந்தபின் உபயோகிக்க முடியாதெனக்கண்டுவலம் கேட்டிருக்கின்றனர். இவ்வாறு நாட்டு மக்களின் வரிப்பணமெல்லாம் பாழாக்கப் படுகின்றது ஆள்பவர்களால். சுதந்திரம் வாங்கியதால் தாங்கள்தான் ஆளவேண்டும் என முன்வந்து நடத்தும் இவர்களின் செய்கை, அண்ணா கூறியது போன்று, பள்ளியைக் கட்டிய கொத்தனார்தான் உபாத்தியாயராகத் தகுதியுள்ளவன் என்று கூறுவதைத்தான் ஒத்திருக்கின்றது என்பதை அரசியல் புரிந்த எவராலும் மறுத்துக்கூற முடியாது.

இரஷ்யாவைச் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறார் நேரு. அவர் கண்ட காட்சிகளும் அவருக்களிக்கப்பட்ட வரவேற்புகளும் படமெடுக்கப்பட்டு இன்று இங்கு காட்டப்படுகின்றது காட்சிகளும் வரவேற்புகளும் மிகப் பிரமாதமானதாகக் காணப்படுகின்றன என்றாலும், திரும்பி வந்த நேரு இன்று நாட்டில் 'செக்கட்டான்' ஆடும் நிலையில்தானிருக்கிறார்! இந்நிலையில் தாங்கள்தான் நாட்டையாளத் தகுதியுடையவர்கள் என தப்பட்டையடிக்கின்றனர் காங்கிரஸ்காரர்கள்.

நாம் திராவிட நாடு கேட்பதை மட்டும் நாட்டைத் துண்டாடக் கூடாது எனக்கூறிக் கண்டித்துக் கொண்டு இன்று தட்சணப் பிரதேசம் பிரிப்பதில் ஈடுபடுகின்றார்களென்றால் இத்தகைய கண்துடைப்பு வேலைகளை என்ன பெயரிட்டு அழைப்பது! இன்றிருக்கும் மத்திய சர்க்காருடன் எத்தகைய தொடர்புமற்ற தனி நாட்டுத் தனியரசு தான் நாங்கள் கேட்டுவருவது. திராவிட நாடு கோரிக்கைக்கும் தட்சிணப்பிரதேச அமைப்புக்கும் எவ்வித உடன்பாடுங் கிடையாது. மொழிவழியாக பிரிக்கப்பட்டு முறையாய், தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் ஒன்றாய் இணைந்து கூட்டாட்சி நடத்துவதையே நாங்கள் நாடுகின்றோம். தற்போது ஆந்திரர்களோ, கன்னடக்காரர்களோ அன்றி மலையாளத்தவரோ எங்கள் கோரிக்கைகளை சரிவர புரிந்து கொள்ளாமலிருக்கலாம் எனினும் சிறிது காலத்திலேயே அவர்களும் புரிந்து கொண்டு எங்களுடன் இணைந்து பணியாற்ற முன் வருவார்கள் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தீர்க்கதரிசி. 2 ஆண்டுகட்கு முன்னரே நாம் கைத்தறி துணிகளை ஆதரிக்க முன் வந்தோம். அதுபோதெல்லாம் கவலையெடுத்துக் கொள்ளாத காங்கிரஸார் ஏதோ தெளிவடைந்து இன்று கைத்தறித் துணிகளை ஆதரிக்க முன் வந்துள்ளார்கள். தாங்களாகவே ஏதேனும் உருப்படியாக ஒன்றைத் திட்டமிட்டுச் செய்கிறார்களா என்றால் இதுவரை ஒன்றுமில்லை. பதவி ஆசைதான் காங்கிரஸ்காரர்களிடையே தலை தூக்கி நிற்கின்றது.

இவ்வித ஊழல்களெல்லாம் நிறைந்த காங்கிரஸை உயர்த்திப் புகழும்—வள்ளிமுத்துக்களின் பேச்சைக்கேட்டு பம்பாய் தி மு கழகத்தவர்கள் 4000 பேர் காங்கிரசில் சேர்ந்து விட்டால், இவர் தமிழ் நாட்டில் பத்துப் பதினைந்து கூட்டங்களில்—பல்வேறு இடங்களில் பேசி ஆயிரமாயிரமாய் ஆள் சேர்த்து தி. மு. கழகமே இல்லாது செய்திருக்கலாமே. தமிழ் நாட்டில் தலைகாட்டவே வழியில்லாத இதுகளெல்லாம் இங்கு வந்து வீண் டம்பம் அடித்துக்கொள்வதை. பொதுமக்களாகிய நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். என்பதுடன் தி. மு கழகத்திற்கு நல்ல ஆதரவு தந்து, மூட நம்பிக்கைகள் அழிந்துபடவும், நமது நாடு விடுதலை பெறவும் உங்கள் ஒத்துழைப்பை நல்கி மேலும் கழகத்தைப் பெருக்கிவர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு நன்றி கூறி முடிக்கிறேன்.

*

பம்பாய் தி. மு. கழக 6-வது ஆண்டு நிறைவு விழா 2-11-55 புதன்கிழமை மாலை சுமார் 6-30மணியளவில் தாராவி வ, உ. சி. திடலில் கழகச் செயலாளர் தோழர் சி. த மு, இர, ஆரிய சங்கான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது விடுமுறை நாளாக இல்லாமலிருந்தும் ஏராளமான மக்கள் குழுமியிருந்து கூட்டத்தை சிறப்பித்தனர். கழகத் துணைச்செயலாளர் தோழர் சு. தங்கவேலன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார், படிப்பகப் பொறுப்பாளர் தோழர் எஸ். தங்கையா அவர்கள் கொடியினை ஏற்றிவைத்து அரியதோர் உரையாற்றினார்.

அடுத்து "கிளர்ச்சி" ஆசிரியர் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் நீண்டதோர் சொற்சொற்பொழிவாற்றினார், பின் தாராவி தி. மு. க, ப. தி. மு. க தலைமை நிலையம், கொலாபர் தி, மு. க. மகிழ்ச்சி இல்லம் மாதுங்கா தி. மு. க. தாரு தி. மு, க. பாண்டுப் தி மு.க.தேவர்வாலிபர்சங்கம், சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவுமன்றம் ஆகியவைகள் கைத்தறி ஆடைகளும், சயன் தி. மு. க. திருவள்ளுவர் கலாமன்றம், அந்தேரி தி. மு. க. ஆகியவைகளின்சார்பாக மலர் மாலைகளும் தோழர் தங்கப்பழம் அவர்கட்கு அணிவிக்கப்பட்டன. தலைவர் பின்னுரைக்குப்பின் துணைச் செயலாளர் நன்றிநவில கூட்டம்இனிது முடிந்தது. தொகுத்தவர்-புத்தாசு

தொழிலனுபவமும் திறமையுமுள்ள விற்பனையாளர்கள் தேவை

'ஜனசக்தி' இதழின் வியாதிக்கு மருந்து!

ஐ. மா. பா. க்களின் தடுமாற்றத்திற்கும் டோஸ்!

"ஜனசக்தி" ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

30—10—55 தேதியிட்ட 'ஜனசக்தி' இதழில் ஐ. மா. பா. என்பவர் தி. மு. க. தலைவர்களும் ரயில்வே தொழிலாளர்களும் என்ற தலைப்பில் எழுதியுள்ளதில் தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியனைப் பற்றியும் எழுதியுள்ளபடியால் யூனியன் தலைவன் என்ற முறையில் நான் பதில் எழுத கடமைப் பட்டுள்ளேன். இதைத் தங்கள் இதழில் வெளியிடும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

"தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியனில் ஈடுபட்டிருப்போர் தி. மு. கழகத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு ஒத்த கருத்துடையவராக விளங்கிவருகின்றனர். மற்ற ரயில்வே தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் பொருளாதார நிலையை மட்டும் கவனிக்க ஏற்பட்டவனவாக இருக்கின்றன. ஆகவே ரயில்வே மென்ஸ் யூனியனில் சேருங்கள்". என்று தி. மு. கழக பொதுச் செயலாளர் எழுதியதை எடுத்துக் காட்டி அதுபோல் கம்யூனிஸ்ட்டுகள் லேபர் யூனியனில் நடந்து கொள்வதில்லை. என்று எழுதப் பட்டுள்ளது.

தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியனில் சகல கட்சி அனுதாபிகளும் உள்ளனர். பொன்மலையில் மட்டும் திராவிட வர்லிபர் கழகத்தவர் யூனியன் நிர்வாகப் பொறுப்பில் உள்ள படியால் அவர்கள் தி. மு. கழக அனுதாபிகளை யூனியனில் சேர்ப்பதில்லை. இது தொழிற் சங்க இயக்கத்திற்கு ஊறு தேடும் கொள்கையாகையால் அவர்களையும் சேர்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்தியதுடன் பொன்மலையில் பல தொழிலாளர்களுடைய செல்வாக்கைப் பெற்றுள்ள தோழர் பராங்குசம் அவர்களையும் அவரைச் சார்ந்த தோழர்களையும் யூனியனில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அரசியலில் திராவிட கழகத்திற்கும் தி. மு. கழகத்திற்கும் கருத்து வேற்றுமையுள்ளபடியாலும், தோழர். பராங்குசம் அவர்கள் தி. மு. கழக அனுதாபியாகையாலும் அவர் தி. மு. கழக பொதுச் செயலாளரை யோசனைக் கேட்டார். அதற்கு தி. மு. கழக பொதுச் செயலாளர் S. R. M. U. தான் கழகம் ஆதரிக்கக் கூடிய கொள்கையுடைய தாகையால் அதில் சேருங்கள். என்று யோசனை கூறினர். இது ஒற்றுமையை சீர்குலைக்கும் செயல் என்று ஐ. மா. பா. கூறுகிறார்! ஒதுங்கி நிற்கும் தொழிலாளர்களை யூனியனில் சேருங்கள். என்று சொல்லுவது சங்கத்தைப் பலப்படுத்துவதாகும்ம யொழிய எப்படி சீர்குலைக்கும் செயல் ஆகும் என்று எனக்குப் புரியவில்லை. தி. மு. கழக அனுதாபிகள் ஒதுங்கி நிற்க வேண்டும் அல்லது தனி யூனியன் ஆரம்பிக்க வேண்டுமென்று ஐ. மா. பா. கருதுகிறார் போலும்!

ஒரு அரசியல் கட்சி குறிப்பிட்ட தொழிற்சங்கத்தை ஆதரிப்பது என்பது நடைமுறையில் உள்ள கொள்கையே. உதாரணமாக. நீங்கள் சார்ந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்திய ரீதியில் இயங்கும் I. N. T. U. C. யை ஆதரிப்பதில்லை. மாறாக A. I. T. U. C. யை ஆதரிக்கிறது. காரணம் I. N. T. U. C. கொள்கைக்கும் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கைக்கும் ஒத்து வரவில்லை. அதேபோல் தென்பகுதி ரயில்வேயில் உள்ள எம்பிளாயிஸ் யூனியனையோ, அசோஷியேஷனையோ, SRMUவையோ ஆதரிப்பதில்லை ஆனல் லேபர் யூனியனை ஆதரிக்கிறது. காரணம் லேபர் யூனியன் தான் சிறந்த ஸ்தாபனம் என்று உங்கள் கட்சி எண்ணுகிறது. பல தொழிற் சங்கங்கள் உள்ள இடத்தில் இன்னது தான் சிறந்தது என்றுகூறி அதை ஆதரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கு உரிமை இருப்பதுபோல் தி. மு. கழகத்திற்கும் உரிமை உண்டு. லேபர் யூனியன் தான் சிறந்த ஸ்தாபனம் அதை ஆதரியுங்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுவது போல் S.R.M.U. தான் சிறந்த ஸ்தாபனம் அதை ஆதரியுங்கள் என்று சொல்ல தி. மு. கழகத்திற்கும் உரிமை உண்டு. இந்த உரிமையை கொடுக்க மறுக்கிறார். ஐ. மா. பா.—ஏன்?

ஒதுங்கி நிற்கும் தொழிலாளர்களும் SRMUவில் சேர்ந்தால் அது மாபெரும் சக்தியாக இயங்கும் அதனால் கம்யூனிஸ்டுகள்பிடியிலுள்ள லேபர் யூனியன் செல்வாக்கு மங்கும் என்ற பயமா? எனவே SRMU வளர விடாமல் தடைபோடும் எண்ணத்துடன் அது எழுதப்பட்டதென நான் திட்டமாகக் கூற முடியும்.

தி. மு. கழகத்தின் அரக்கோணத் தீர்மானம் பேரூர் முடிவு இவைகளைப் பற்றி விளக்கமெழுதும் பொறுப்பு கழகத்தின் பொதுச் செயலாளருடையதாகையால் நான் இதைப்பற்றி மேலும் எழுதவில்லை.

ஐ. மா. பா எழுதியுள்ளபடி "தொழிலாளர்களுக்கு பகுத்தறிவைப் புகட்டிய பிற்பாடுதான் பொருளாதாரக் கோரிக்கைகளைப் பெறமுடியும்." என்று SRMU சொல்லவில்லை. பொருளாதாரக் கோரிக்கைகளைப்பெற முயற்சி செய்யும்போதே சமுதாய முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டுமென்பது தான் S R. M U. வின் கொள்கை.

லேபர் யூனியன்தான் பல போராட்டங்கள் செய்துள்ளதென்றும் அதில் உள்ள பலர் தியாகம் செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. ரயில்வேத் தொழிலாளர்களின் போராட்ட சரித்திரத்தை மீண்டும் படிக்கும்படி தோழர். ஐ. மா. பாவைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அகில இந்தியாவிலும் உள்ள ரயில்வேத் தொழிலாளர்கள் 1946 ஜூன் 27-ல் வேலை நிறுத்தம்செய்ய முடிவுசெய்து அதற்காக தென் இந்திய ரயில்வேயில் 12 பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் நானும் ஒருவன். 1946 ஆகஸ்ட் 25/26ல் உரிமைக்காக வேலை நிறுத்தம் நடந்தது. அதை நடத்திய அறுவரில் நானும் ஒருவன். இப்போராட்டங்களின் விளைவாக இருமுறை சிறையும் சென்றுள்ளேன் பொருள் நட்டமும் அடைந்துள்ளேன், என் தலைமையில்தான் SRMU இயங்கி வருகிறது. பிறர் செய்துள்ள சேவையை, தியாகத்தை மறைப்பது நல்ல பண்பாகாது.

"தொழிலாளர்களது நலனைப் புறக்கணித்து முதலாளிகளுக்கு மறைமுகமாக ஆதரவு தருவதால்" என எழுதப்பட்டுள்ளது. இதைப் படித்த பின் எனக்கு பழைய சம்பவங்கள் ஞாபகத்திற்குவந்தது. 1949-ல் சிறையில் இருந்தபோது ஒவ்வொருவருக்கும் குற்றப் பத்திரிகை வந்தது. அதில் "நீ சதி செயலில் ஈடுபட்டாய், அரசாங்கத்தைக் கவிழ்க்க திட்டமிட்டாய், ஆயுதங்களை உடைக்க திட்டமிட்டாய், கம்யூனிஸ்ட்டுகளுடன் தொடர்பு வைத்திருந்தாய்" என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தது. இப்படியே எல்லோருக்கும் இருந்தது. எங்கு, எப்பொழுது, எப்படி எவருடன் சதி செய்யப்பட்டது. அதனால் ஏற்பட்ட நட்டமென்ன கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு வைத்திருந்ததால் ஏற்பட்ட பாதகம் என்ன? என்றெல்லாம் விளக்கப்படவில்லை. குறிப்பாக எழுதாமல் இப்படி குறிப்பிட்டதை எடுத்துக் காட்டி வழக்கு மன்றங்களில் வழக்காடி அரசாங்கத்தின் குற்றச்சாட்டு பொய் என்று நிரூபித்த பெருமை கம்யூனிஸ்ட் கட்சியைச் சாரும். அப்பேர்ப்பட்ட கட்சியை சேர்ந்த ஐ. மா. பா. எழுதுகிறார்: 'முதலாளிகளுக்கு மறைமுகமாக ஆதரவு தருவதால்" என்று. யார் தந்தார்கள்? எப்பொழுது தந்தார்கள் எந்தவகையில் தந்தார்கள் என்று ஏன் எழுதப்படவில்லை.

S R M U ஆரம்பித்தபின் வீட்டுவாடகையை உயர்த்தியதற்காக கிளர்ச்சி நடந்ததே அதில் S R M U. பங்குகொள்ளவில்லையா? கடந்த ஜூன் 27-ல் கோரிக்கை தினம் கொண்டாடப்பட்டதே அதில் S R M U கலந்து கொள்ளவில்லையா? எந்த கிளர்ச்சியில் S. R. M U. பின் வாங்கியது? முதலாளிக்கு எந்த வகையில் S R, M. U. ஆதரவு தந்தது? கூறமுடியுமா ஐ. மா. பா.? சாதாரண ஏடுகளில் இப்படி பொறுப்பற்றதனமாக எழுதலாம் 'கம்யூனிஸ்ட்' கட்சியின் இதழிலா இப்படி எழுதுவது?

"நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் எதிர்ப்புகளும் அதிகமாகி விட்டது" என்கிறார். இப்படி நடப்பது இயற்கைதானே. இதை நீங்கள் மறுக்க முடியுமா? கட்சிகளில் மிக நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது கம்யூனிஸ்ட் கட்சி—இந்திய பிரதமர் நேரு கூட பாராட்டியிருக்கிறார்! அப்பேர்ப்பட்ட கட்சியில் மேற்கண்ட சம்பவங்கள் ஏற்படவில்லையா?

கம்யூனிஸ்ட்களின் தாயகமான ரஷ்யாவை எடுத்துக் கொள்வோம். 21—1—1924ல் லெனின் இறந்தபின் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஸ்டாலினுக்கும், புரட்சி ராணுவ கவுன்சிலின் அதிபராக இருந்த டிராட்ஸ்கிக்கும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைவராயிருந்த சினோவுக்கும் (ZINOVIEV) இடையில் போராட்டம் நடக்கவில்லையா? முடிவில் ஸ்டாலின் வெற்றி பெற்று மற்றவர்களை ஒழிக்கவில்லையா? ஸ்டாலின் இறந்தபின், மாலன்கோவ், மாலடோவ், பெரியா, முக்கூட்டு அணி உருவாகி பணி செய்யும்போது பெரியா பலியிடப் படவில்லையா? முடிவில் மாலன்கோவ் விலக, புல்கானின் வரவில்லையா?

இந்தியாவை எடுத்துக் கொள்வோம். கட்சியை கட்டி வளர்த்த P. C. ஜோஷி வகுத்த பாதை தவறு என ரணதிவே கூறி ரணகளத்தை உண்டு பண்ணவில்லையா? பிறகு அப்பாதை தவறு என அவரை விலக்கி அஜாய் கோஷ் வரவில்லையா? இவை எல்லாம் ஏன் ஏற்பட்டன? அதுவும் நல்ல முறையில் கட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியில்? இதுமாதிரி சம்பவங்கள் இயற்கை. தவிர்க்க முடியாதன. இதை பெரிதுப்படுத்தி எழுதுவது சரியல்ல. கருத்து மோதுதல் (Clash of ideologies) ஏற்படத்தான் செய்யும்.

ஆனல் மற்ற கட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. கருத்து வேற்றுமை ஏற்பட்டால் செல்வாக்கிழந்தவர் விலக்கப்படுவார். ஆனல் கம்யூனிஸ்ட் கட்சியில் விலக்கப்படுவதுடன் பெரும்பாலோரின் உயிரும் உடலிலிருந்து விலக்கப்படும்.

கம்யூனிஸ்ட் கட்சி நல்ல முறையில் அமைக்கபபட்டுள்ளதென்று அக் கட்சிக்கு மதிப்புக் கொடுத்து வந்தவர்களில் நானும் ஒருவன். ஆகையால் இம்மாதிரியெல்லாம் பொறுப்பற்ற வகையில் எழுத வேண்டாமென பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

அன்புள்ள,

சி. இராகவானந்தம்

அடுத்த வாரம்

பாலைவன் ரோஜா—சுல்தான ரசியா—சூத்தரசன் மடல்—கலைபரங்கம்—முதலியனவும், தி. மா. மு. க. மாநில மாநாட்டு விவரங்களும் 25—11—55 திராவிடன் இதழில் வெளிவரும்.

"சுதந்திர வீரர்"களின் சாயம் வெளுக்கிறது !

முதல் பக்கத் தொடர்ச்சி

தும், காங்கிரசில் உத்தியோக பூர்வமான அபேட்சகருக்குப் பட்டை நாமம் தீட்டப்பட்டது! அதற்குப்பின் காஞ்சியில் — இப்போது நகரசபைத் தேர்தலில் அதே திருவிளையாடல் நடந்தேறியிருக்கிறது!

பாபம் — காஞ்சி நகரசபைத் தலைவர் தேர்தலில் காங்கிரசை நம்பி மோசம்போன அந்த பிரபலஸ்தர் சுயேச்சையாளராகவே நகரசபைத் தலைவருக்கும் போட்டியிட்டிருந்தால், நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார். அந்த அளவுக்கு அவருக்கு காஞ்சியில் செல்வாக்குண்டு.

எனினும் தான் ஒருபதவி பெற வேண்டும் என்பதற்காக மற்றவர்களின் அரசியல் தன்மானத்தை அடிமை கொள்வது கண்ணியமாகுமா? இதை அந்த பிரபலஸ்தர் உணரவில்லை! உணரும்படியாக உள்ளூர் காங்கிரஸ் முகாமினரும் அவரை விடவில்லையாம்!

அந்தப் பிரபலஸ்தர் ஏதோ தனிப்பட்ட மனிதர்—அவருக்கிருந்த பதவி ஆசையினால் பாதை தவறி விட்டதாக வைத்துக் கொண்டாலும் ஆசியாவின் ஜோதியைத் தலைவராகக் கொண்டுள்ள காங்கிரஸ் முகாமினருக்கு பொதுவாழ்வில் கண்ணியம் இருக்க வேண்டாமா யென்று கேட்கிறோம்?

எப்படியாகிலும் நகர சபைகள் தங்களின் ஆதிக்கத்தில் இருந்தால் போதும் என்று மட்டுமே தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைமைப் பீடம் வாயைப் பிளக்கிறதே யன்றி அந்த ஆசையை நேர்மையுடன் நிறைவேற்றுதல் வேண்டும் என்ற தன்மானம் துளிகூட இல்லையே!

எனவே இப்பேர்ப்பட்ட ஆதிக்கக்காரர்களுக்குக் காஞ்சி சரியான புத்தி புகட்டி விட்டது. உண்மைக் காங்கிரஸ் காரர்கள் சிலர் ஒன்று சேர்ந்து புகட்டிய இந்தப் பாடத்தைக் கண்டு திருத்த வேண்டிய திரு. கக்கன் அவர்களோ ஒழுங்கு நடவடிக்கை எடுப்பேன் என்று கொக்கரிக்கிறார்! பரிதாபம்—பரிதாபம்!!

காஞ்சி காங்கிரசின் படலம் மட்டும்தான் இப்படி யென்று கருதாதீர்! ஈரோட்டிலும் 'கக்கன் சர்க்கஸ்' மகா டல்லாம்!

அங்கேயும் திடீர் காங்கிரஸ் காரராக மாறிய ஒரு பிரபலஸ்தர்—நகர சபைத் தலைவர் தேர்தலுக்கு உத்தியோப் பூர்வமான காங்கிரஸ்காரராகப் போட்டியிட்டாராம்! இதனைக் கண்டு மனவேதனை யடைந்த உண்மைக் காங்கிரஸ் காரர்கள், திரு. குப்புசாமி என்பவரை நிறுத்தினராம்! தேர்தல் முடிவில் திடீர் காங்கிரஸ் (உத்யோக பூர்வமான காங்கிரஸ்) கோவிந்தா போட்டுக் கொண்டதாம்! காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட குப்புசாமி வெற்றி பெற்றாராம்!

திரு. கக்கன் இங்கே யுள்ள காங்கிரஸ்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கர்ஜனை புரிகிறாராம்!

தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைமைப்பீடம் ஆதிக்க வெறியில் பிணைக்கப்பட்டு, செய்யும் தனது தவறுகளை உணர—மனமார ஒப்புக் கொண்டு திருந்த மறுக்கிறது அதற்கு பதிலாக உண்மைத் தொண்டர்கள் மீது பழிவாங்க முனைகிறது. இது எப்படியோ போகட்டும். அவர்கள் சொந்த விஷயம்!

*

நகர சபைகளிலோ அன்றி மாவட்ட ஆட்சி மன்றங்களிலோ மாற்றுக் கட்சியினர் நிர்வாகம் நடத்தினால்தான் என்ன — குடிமுழுகிப் போய்விடுமா? சுதந்திர குடி அரசினர் என்று தப்பட்டை அடிக்கும் காங்கிரஸ் மூத்தண்ணுக்கள், தாங்களாவே இவ்விதம் மாற்றுக் கட்சியினருக்கு விட்டுக் கொடுக்கும் மனவளம் பெறாவிட்டாலும், மாற்றுக் கட்சியினர் மெஜாரிடியாக வந்துள்ள இடங்களில் கூடவா காங்கிரஸ் ஆதிக்கம் தலையிட்டு தகிடுதத்தம் புரிய வேண்டும்?

இந்த அற்ப ஆசைக்காக காங்கிரசின் கண்ணியத்துக்கே இழுக்கு தேடும் வகையில் — பிறரிடம் பேரம் பேசுவதும், அவர்களுக்குத் தேசிய முலாம் பூசுவதும் நேர்மையாகுமா—அறிவுடமையாகுமா யென்று கேட்கிறோம்!

தேசிய முகாமினரின் இத்திருவிளையாடலைக் காணும் போது—நீதிக் கட்சியினர் எவ்வளவோ தன்மானத்துடன் அரசியலில் இருக்க வேண்டிய நற்பண்புகளுடன் கூடுமானவரை நடத்திருக்கின்றனர் என்பதை யார்தான் மறுக்கக்கூடுமென்று கேட்கிறோம்?

நகர சபைத் தேர்தலிலேயே இவ்வளவு மட்டரகமான போக்கு என்றால், பொதுத் தேர்தலில் இன்னும் எந்த அளவுக்கு, காங்கிரஸ் தலைமை கீழ்நோக்கிச் செல்லுமோ அறியோம்.

இந்த லட்சணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் அரசியல் உலகில் பத்தினித்தனம் வேறு பேசுகின்றனர்! வெட்கம் வெட்கம்.

தூத்துக்குடி நகரசபைத் தேர்தல்

தூத்துக்குடி நகரசபைத் தேர்தலில் 18—வது வார்டில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரை எதிர்த்து நின்றவர் காங்கிரஸ்காரர் அல்லவென்றும், கழகத் தோழரே யென்றும் இதன் வாயிலாக விளக்கப்படுகிறது.

பயிற்சி

பம்பாய்—தாராவி, 41, ஆகாசவாடி மகிழ்ச்சி இல்லத்தின் 'பயிற்சி' கையெழுத்தேடு திறப்பு விழா 6–11–55ல் தோழர் த. மு. பொற்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. வளர்மதி கையெழுத்தேட்டைத் திறந்து வைத்து சிறப்பு சொற்பொழிவாற்றினார். தோழர்களான பி எஸ். வேம்பு எம். ஏ. சண்முகம், எஸ் ஜோசப் ஜார்ஜ், எ. எல். பெருமாள், ஆகியோர் 'பயிற்சி' கையெழுத்தேட்டின் அவசியம் பற்றியும், அவை எந்த முறையில் இயங்கவேண்டும் என்பதைப் பற்றியும், நல்ல பல கருத்துக்களை எடுத்தியம்பினார்கள். பின்னர் தோழர். எம். வி. இராமையா நன்றி நவில, தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஈழத்தில் நம் குரல்

"உரிமைக் குரல்"

தங்கள் இதழ்

ஆசிரியர் வி. எஸ். முருகன்

★

தனிப்பிரதி 10 சதம்

கதை, கட்டுரை, கவிதை, முதலியவை தாங்கி வருகிறது.

முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் மட்டும் எழுதுக.

"உரிமைக் குரல்"

69/1 பீர்சாகிபு வீதி, கொழும்பு.

வானொலி . . . . . தொடர்ச்சி

பொழுதைப் பாழ்படுத்துவது மதிநுட்பமாகாது.

இவ்வேத ஒலிபரப்புகள் மழைகாலத் தவளைகளைத் தவிர வேறு எதையும்ஞாபகபடுத்தமுடியாது.

இந்து நீதி பரிபாலன சட்டத்தின் தந்தையான மனு விதித்த கண்டிப்பான தடையை அகில இந்திய ரேடியோ பொருட்படுத்தவில்லை. மனுவின் சட்டம் இவ் ஒலிப் பரப்புகளை அனுமதிக்கவில்லை. உயர் ஜாதியில் பிறந்தவர்களைத் தவிர மற்றவர்கள் வேதங்களின் ஒலியை கேட்கவே கூடாது என்று மனுதர்ம சாஸ்திரம் விதிக்கிறது. துணிவுடன் கேட்கும் கீழ் சாதியினர் காதுகளில், கொதிக்கும் ஈயத்தை ஊற்றுவதுதான் தக்க தண்டனை என்றும் மனுவின் சட்டம் சொல்லுகிறது.

இந்த தீவிர தடையின் உள்நோக்கம், வேதங்களின் வண்டவாளங்கள் கீழ் சாதியைச்சேர்ந்த அறிவாளிகளுக்கு வெளியாகாமலிருப்பதற்காக யிருக்கலாம், எப்படி யிருப்பினும் இந்தத் தடை என்னமோ, சமீபகாலம் வரையில் அமுல் செய்யப்பட்டே வந்தது. இன்னும் வைதீகர்கள் இத் தடையின் அவசியத்தில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

இந்துக்களென்று அழைக்கப்படும் பெரும்பாலான மக்கள் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களே, வேதங்களை ரேடியோவில் ஒலிபரப்பும் போது இவர்கள் காதுகளில் விழாமல் பார்த்துக் கொள்வது முடியாது. இவர் அனைவர் காதுகளிலும் ஈயத்தை காய்ச்சி ஊற்ற வேண்டுமல்லவா? இதற்காக எத்தனை கோடி டன் ஈயக் கட்டிகள் வேண்டுமென்று கணக்கிடும் பணியை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்!

எம். எஸ். பி. சோலை (நாடார்)

திண்டுக்கல் பிரபல வியாபாரியும் தி. மு கழக அனுதாபியுமான திரு எம். பி. எஸ். சோலை(நாடார்) அவர்கள் 14–11–55 அன்று இயற்கை யெய்திய செய்தி கேட்டு வருந்துவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆ-ர்!

திராவிட மாணவ முன்னேற்றக் கழக

2-வது மாநில மாநாடு

★

19—11—55 சனி காலை 8-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

●

தலைவர் : கே. ஏ. மதியழகன்

திறப்பாளர் : இரா. நெடுஞ்செழியன்

பேசுவோர் : அறிஞர் அண்ணா

என். வி. நடராசன்

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்

★

நன்கொடை ரூபாய் 1, அணா 8.

உ. பில்லப்பன்
எஸ். லெனின்
அ. தீ. தயாளன் செயலாளர்கள்

டி. கே. பொன்னுவேலு
வரவேற்புக் குழுத் தலைவர்

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

மனதிற்கு மகிழ்ச்சி யூட்டுவது

'அரசு' சுகந்த பாக்குத் தூள்

ம. சு. ராசன்
அரசு பாக்குத் தூள் தயாரிப்பவர்
பழனி ரோடு, திண்டுக்கல்

M. S. RAJAN
Arasu Betel Nut Manufacturer
Palani Road DINDIGUL

ஊடல் ஒழிய

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் ஆயுரையை, பிணக்கந் தீர்ந்தவுடன் கூடி முயங்கி இன்பம் துய்க்கும் காதலர்கள் அனுபவ ரீதியாக அறிந்திருக்கக் கூடும்.

ஊடி இருக்கிற நேரத்திலே கூடு மெண்ணத்தோடு வரும் ஆண்மை, பெண்மையிடம் கெஞ்சி நிற்கிறது. பெண்மையின் பெருமையை அறிய இஃது ஓர் சிறந்த இடம் என்று சொல்லலாம்.

பெரியவர்கள் சொன்னார்கள்.

"தாயாய் வந்து தனங்கொடுத்
[தாள், நல்ல
தாரமாய் வந்து சுகங் கொடுத்தாள்
சேயாய வந்து முத்தங் கொடுத்தாள்
[இந்த
சேதியை கேளடி ஞானக் கண்ணே"

—என்று.

ஆனால், பெருமையின் முகட்டிலே நின்று எக்காள மிடும் இதே பெண்மை தான் கூடுகிற நேரத்திலே ஆண்மைக்கு வளைந்து கொடுக்கிறது! ஒத்துழைக்கிறது.

எனவே ஆட்சி புரியும் நிலை ஆண்மைக்கு மட்டுமல்ல. பெண்மைக்கும் உண்டு என்பதை ஒவ்வொருவரும் கண்கூடாக, அனுபவிக்கும் காட்சி இது.

இப்படி ஊடி கிடக்கிற பெண்டிரை சாந்தப்படுத்த ஆடவர்கள் கையாளும் முறைகள் பலப்பல உண்டு. அனுபவமுள்ளவர்கள் அறிவார்கள், "அன்பே அமுதே. கண்ணே, மணியே..." என்று ஆரம்பமாகி, நெருங்கி — முகர்ந்து— இரந்து வணங்கி — வருடி—ஏன் சில சமயங்களில் பொய்யாக அழுது......... இப்படி பல முறைகள்.

இதோ அத்தகைய பரிதாபத்திற்குரிய காட்சிகளில் ஒன்று — அதி வீரராம பாண்டியன் எனும் பைந்தமிழ் மன்னன் தீட்டிய "நைடதம்" எனும் நூலிலே உள்ளது.

கோகிலக் குரலுடைய குளிர்மதி முகத்தினர் அவர்கள். தங்கட் தங்கள் தலைவர்களுடன் ஊடி எழுந்து விட்டனர். என்ன செய்வார்கள் ஆடவர்கள்.

கெஞ்சினார்கள் — கூத்தாடினார்கள், கேட்க வில்லை இந்த வஞ்சிக் கொடிகள்.

அவர்களுக்கு ஓர் ஆனந்தம் போலும் இப்படி ஆடவர்களை சோதிப்பதிலே குறும்புக்காரிகள் தான்!

ஒளி வீசுகின்ற இரத்தினம் பதித்தத் தூண்களிடம் சென்று, தூணோடு தங்கள் முகங்களை சேர்த்து நின்றுக் கொண்டனர்.

பாவம், பரிதாபத்திற்குரிய நிலையாகி விட்டது ஆடவர்கள் பாடு. நேரம் ஆக ஆக—இடைவெளி பெருகப் பெருக இவர்களுக்கு வெப்பமும் அதிகரித்து விட்டது.

தாள முடியாத வெப்பம்!

திடீரென்று ஒரு யோசனை! எல்லோரும் என்ன செய்தார்கள் தெரியுமா!

நேராக தம்தம்காதலியரிடம் சென்று பலாத்காரமாக, வற்புறுத்தி இழுத்தனர் என்று எண்ணுகிறீர்களா!

சேச்சே! அதுவல்லவே "ஸ்ருங்கார" சாஸ்திரங்கூறும் நுணுக்கம்! நைடதத்துப்பினர்களுக்கு இது தெரியாதா என்ன! அவர்கள் ஒரு தனி முறையை

(நேராக சென்றனர் நேரிழையரின் பாதார விந்தங்களிலே சாஷ்டாங்கமாக விழுந்து விட்டனர்)

ஆமாம்! பெண்களின் கால்களில் ஆண்கள் அப்படியே விழுந்து வணங்கினர்.

அந்தப் பேரழிகளுக்கு அப்போது தான் கருணைப் பிறந்தது கடைக்கண் வீசினர்—பிணக்கம் நீக்கினர்—இணங்கினர் என்பதை அறிவிக்க லேசாக சிரித்தனர்.

பிறகு—

சேச்சே! இனி ஆராய்வது முறையல்ல இதுவரை கண்டதை யடும் மீண்டும் ஒரு முறை கவிதை வடிவிலே பார்த்து விடுவோம்.

ஆடவரோடு ஊடி எழும்
அம்சொல் மட நல்லார்
நீடொளிய தூணின் முகம்
கோட்டி எதிர் நிற்ப
வாடும் இடை யாரென
மருண்டு இறைவர் பாவைத்
தாள் தொழுலும் மெய்த்துனி
தகைப்ப நகை செய்வார்.

[நைடதம்—நகரப்படலம்-19]

(கோட்டி — வளைத்துக் கொண்டு. இறைவர் — கணவர்கள், துனி—பிணக்கு, தகைப்ப—தடுக்க.)

பா. நிலவரசு

→'மனு' வழங்கிய அநீதி!←

பா. நிலவரசு

●

வேதங்களும், ஸ்மிருதிகளும் தருமத்திற்கு இருப்பிடங்களாதலால் இவைகளை யுக்தி வாயிலாக எவனாவது கண்டிக்க முயன்றால் அத்தகைய வேதநிந்தகனை நாஸ்திகனை நல்லோர்கள் ஊரை விட்டுத் துரத்தி விட வேண்டும்.

○

கொலைத் தொழில் புரிந்த மற்ற வருணத்தார்களைத் தூக்கிலிட வேண்டும், பிராமணன் இத்தகைய குற்றம் புரிவானாயின், அவனது தலைமயிரை மட்டும் மொட்டை யடித்தாலே போதுமானது.

○

சூத்திரனிடத்தில் ஏதேனும் பொருள் இருந்தால், அதை பிராமணன் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் அவன் அடிமையாதலால் அவனுக்கென்று பொருள் சிறிதேனுமில்லை,

○

பிராமணனது மனம் நோகும்படி சத்திரியன் ஏதேனும் செய்தால் அவனுக்கு நூறு பொன்னும், வைசியன் அங்ஙனம் செய்தால், அவனுக்கு நூற்றைம்பது பொன்னும் அபராதம் விதிக்க வேண்டும்.

பிராமணனைத் திட்டுகிற சூத்திரனைக் கொன்று விட வேண்டும்,

○

பிராமணனுடைய பெயரோ அவனது குலப் பெயரோ கேட்கிற சூத்திரனுடைய வாயில் பத்து அங்குல அளவுள்ள இரும்பாணியை பழுக்கக் காய்ச்சிச் செலுத்த வேண்டும். பிராமணனுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கிற சூத்திரனுடைய காதுகளில் எண்ணெயைக் காய்ச்சிவிட வேண்டும்.

○

கூலி கொடுத்தாலும், இல்லா விட்டாலும் சூத்திரனை வேலை வாங்கலாம், ஏனென்றால் பிராமணனுக்குப் பணிவிடை செய்யும் பொருட்டே இவன் பிரம்மனால் சிருஷ்டிக்கப் பட்டான்.

○

வேத மோதுங்கால் அதைக் காதால் கேட்கிற சூத்திரனது காதுகளில் ஈயத்தையும் மெழுகையும் உருக்கி விடவேண்டும்.

○

சூத்திரன் வேதத்தை வாயினால் சொன்னால் நாக்கை அறுக்க வேண்டும். உணர்ந்து வைத்திருந்தால் நெஞ்சைப் பிளக்கவேண்டும்.

●

தோழர்களே! பதில் கூறுங்கள்.

இந்த பத்தாம்பசலித் தனத்தை மாற்றியமைக்கப் பணியாற்றிய—பணியாற்றிவரும் பகுத்தறிவாளர்கள் நாத்திகர்களா—நாட்டுத் துரோகிகளா அல்லது இந்த பித்தலாட்டம் மறைமுகமாகவாவது நீடிக்க வேண்டுமென்று வாலாட்டுபவர்கள் சமூகத் துரோகிகளா?

தோழர்களே சிந்தித்து கூறுங்கள் உங்கள் தீர்ப்பை.

பெயர் சூட்டு விழா

வடவைத் தோழர் ம. இரா. எ. ரெத்தினசாமி அவர்களின் பெண்மகவுக்கு 23-10-55 ஞாயிற்றுக்கிழமை திருமதி ராஜக்கிளி பாண்டியார் அவர்களின் தலைமையில் பூங்குழலி எனற பெயர் சூட்டப்பட்டது. வடவையில் பகுத்தறிவுக் கொள்கையின் அடிப்படையில் நிகழ்ந்த முதல் பெயர் சூண் விழா இதுவே.

பிறப்பு

கடலூர் நகர தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் மு. சீனிவாசன் அவர்களின் துணைவியாருக்கு 7-11-55ம் நாளன்று பெண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம்.

*

சென்னை 11—வட்ட தி. மு. க. உறுப்பினர் தோழர். என். ராமதாசன் அவர்களின் சகோதரியார் தோழியர். சரோஜா சந்திரன் 2-11-55 அன்று ஓர் ஆண்மகவுக்கு தாயானார். தாயும் சேயும் நலம்.

திருவொற்றியூர்

5-11-55 காலை 9 மணிக்கு தோழர். ஆர். நமச்சிவாயம் தலைமையில் தோழர் டி. கே. பழனிச்சாமிக்கும், தோழியர் புஷ்பத்திற்கும் திருமணம் நிறைவுற்றது. அதுபோது கழகச் சார்பில் வாழ்த்துரை வாசித்தளிக்கப் பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் மணமக்களை வாழ்த்தி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள். கழகத் தோழர் முத்துசாமி ஆண் குழந்தைக்கு அண்ணா அவர்களால் 'வீரமணி' என பெயரிடப் பட்டது.

அன்று மாலை சன்னதி தெருவில் நடக்கயிருந்த பொதுக்கூட்டம் மழையை முன்னிட்டு தோழர் ஜெகநாதன் தியேட்டரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எ. வி. ஆறுமுகம் தலைமை தாங்கினார். தோழர் எஸ். மாசிலாமணி பி. எ., டி. சண்முகம் எம். எல். எ., ஆர். எஸ். பாண்டியன் கே. எ. மதியழகன், கே. கே. நீலமேகம் ஆகியோர் பேசிய பின் செயலாளரால் தி. மு. க. சார்பில் ரூ. 100-4-0 வும் சௌத் இந்தியன் கார்பானிக் கேஸ் பாக்டரி தொழிலாளர்கள் சார்பாக ரூ. 5-0-0 அறிஞர் அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதிக்காக அளிக்கப்பட்டது. விம்கோ தீக் குச்சி தொழிலாளர் சார்பாக தோழர் வை. பார்த்தசாரதி அவர்களால் ரூ. 101-1-0 சிகரெட் பாக்டரி தொழிலாளர்கள் சார்பாக தோழர் தீனதயாளன் அவர்களால் ரூ. 44-2-0 வும் அறிஞர் அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்பட்டது. தொழிலாளர் சார்பாகவும் அண்ணா அவர்களுக்கு கைத்தறி துண்டு அணிவிக்கப்பட்டது பின்னர் அண்ணா அவர்கள் 2—வது மாநில மாநாட்டு நிலைமைகளை விளக்கிப் பேசினார்,

பன்னீர்செல்வம்

27—10—55 இரவு 12 மணிக்கு மீனாட்சிபுரம் தோழர் துரைசாமி பொன்னம்மா அவர்களுடைய குழந்தை பன்னீர் செல்வம் கோர மரணம் அடைந்த செய்தி கேட்டு திடுக்கிட்டேன். பழமை நிறைந்த குடும்பத்தில் பிறந்த குழந்தைக்கு பன்னீர் செல்வம் எனப் பெயரிட்டது கண்டு, பெற்றோரும் கண்டு பூரிப்படையாத விதமாக நான் பெருமை அடைந்தேன். ஆனால் அந்தச் செல்வத்தை இழந்து கண் கலங்கி நிற்கும் பெற்றோரைக்காணும் போது என் நெஞ்சு மிகவும் வேதனைப் படுகிறது. குழந்தையை இழந்த துக்கத்தால் மனம் நொந்து கிடக்கும் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரியப் படுத்திக் கொள்கிறேன் என எஸ் வீ. சக்கரை தி. மு க. செயலார் மீனாட்சிபுரம் (தாராபுரம்) அறிவிக்கிறார்.

கைத்தறி
ஆடையையே அணியுங்கள்

அரசாங்க ஹிந்தியும் - மக்களின் ஹிந்தியும்!

★ இந்தி ஆசிரியரின் கருத்து. ★

காந்தியடிகள், என்றும் பிரதேச மொழிகளைக் குலைத்து அந்த இடத்தில் "ஹிந்தி—ஏகாதிபத்தியத்தை" ஏற்படுத்த எண்ணியதில்லை. வடநாட்டினரும் தென்னாட்டினரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள ஒரு பொது மொழியாக நட்பின் அறிகுறியாக "ஹிந்துஸ்தானி"யை எல்லோரும் கட்டாயமற்ற முறையில் கற்க வேண்டினார். ஆரம்பத்தில் ஹிந்தியைத் தேச மொழியாகக் கூறினார்.

பின்னர் அதில் அளவுக்கு மீறிய புரியாத ஸம்ஸ்கிருதச் சொற்கள் ஊடுருவி மொழியைச் செயற்கை—மொழியாக்கி உருக்குலைந்து வருவதைக் கண்டு சுலபமான ஹிந்தியையும் பழக்கத்தில் உள்ள அரபி ஃபார்ஸி சொற்கள் கலந்த சுலபமான உருதுவையுங் கலந்து "ஹிந்துஸ்தானி"யாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்.

ஹிந்தியையும் உருதுவும் ஒரே மொழியிலிருந்து வந்தவை. உருது ஹிந்தியின் மற்றொரு பிரிவு என்பதை "உருது மொழி வரலாறு" 'ஆபே ஹயாத்' என்னும் நூல் கூறுகிறது. ஹிந்தியில் அன்னிய அராபி ஃபார்ஸி கலந்த உருது கலப்பதை வட நாட்டு' சுத்த ஹிந்தி வெறியர்கள் வெறுக்கிறார்கள்.

காந்தியடிகள் குறிப்பிட்ட தேசமொழியை அரசாங்கம் ஏற்கவில்லை! அவர் "ஹிந்தி—உருது—ஹிந்துஸ்தானி" இம் மூன்றும் ஒரே மொழியின் மூன்று பெயர்களாக ஏற்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டிருந்தார். இப்பொழுதுங்கூட சர்க்கார் ஹிந்தி மொழி வேறு, பொது மக்களின் ஹிந்தி வேறாகத்தானிருக்கிறது! வட நாட்டு ஹிந்தி சீக்கியர்கள் ஹிந்துஸ்தானில் அல்லது எளிய உருதுவைக் கற்றிருக்கும் அளவிற்கு அரசாங்க ஹிந்தியை அறிந்திருக்கவில்லை! வடநாட்டில் ஹிந்து சீக்கியர்களின் கட்சிப் பத்திரிகைகளும், மதப் பத்திரிகைகளுங் கூட இன்றும் "உருது" மொழியில் தான் அச்சாகின்றன.

முஸ்லிம்களின் மொழிதான் உருது என்பது, முழுப் பொய்!! ஹிந்து சீக்கியர்கள் ஏராளமாக "உருது"வை ஆதரிப்பவர்கள் இன்றுமிருக்கின்றனர்.

"நாட்டுப் பிரிவினைக்கு"ப் பிறகும் உருதுவை ஏராளமான ஹிந்துக்களும், சீக்கியர்களும், வளப்படுத்தி வருகின்றனர். 'மறுமலர்ச்சி — ஹிந்தி எழுத்தாளர்கள்' பலர் 'ஹிந்தி' என்ற பெயரில் உருது இலக்கிய பிரசாரத்திலீடுபட்டிருக்கின்றனர். உருது கலக்காத 'தூய ஹிந்தி' செவிகளுக்கு கர்ண கடூரமாகத் தானிருக்கும்! அத்தகைய இந்திக்கு செயற்கை மொழியாக மாறி வரும் இந்திக்கு ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது! ஹிந்தியின் மறுமலர்ச்சியே உருது. ஹிந்தி காட்டுமிராண்டி நிலையிலிருந்தது "நாகரிகம்' முதிர, முதிர காலத்திற் கேற்ப அராபி ஃபாரஸிகச் சொற்கள் சேர்ந்து வளர்ச்சியடைந்த கடைசி எல்லைதான் உருது! "தூய ஹிந்தி வெறியர்கள்" ஹிந்தியை 'உருது' வளப்படுத்தியதற்கு நன்றி செலுத்துவதிற்குப் பதிலாக அதை அடியோடு ஒழிக்கக் கிளம்பியிருக்கின்றனர்! தென்னாட்டிற்கு மற்றவர்கள் எப்படி நினைத்தாலும் குறிப்பாகத் தமிழகத்திற்கு "ஹிந்தி வெறியர்கள் உருதுவினிடம் காட்டிய கைவரிசையை' 'தமிழ்மொழி'யினிடம் ஏன் காட்டமாட்டார்கள் என்ற சந்தேகந் தோன்றுவது இயல்பு!"

சினிமாப் படங்கள் கூட இந்தி என்ற பெயரில் உருது 'கலப்புப் படங்கள்'தான் வருகின்றன. ஸாட்ரூ, லஜபதிராய், மோதிலால் நேரு போன்றோர் உருது அறிஞர்களே! பிரதமர் நேரு கூட அந்த ரங்கத்தில் "உருது"வைதான் நேசிக்கிறார். உருதுவில் பேசும் அளவிற்கு அவரால் ஹிந்தி பேச முடியாது. அவருக்குத் தாய் மொழி உருது! இன்று அரசாங்க 'ஹிந்தி'யில் ஏராளமான "கலைச் சொற்கள்" பொது மக்களுக்கு முற்றிலும் புதியதாக இருக்கின்றன! ஹிந்தி வெறியர்களின் 'புது ஹிந்தி' ஏற்கனவே ஹிந்தி தெரிந்தவர்களுக்குச் சற்றும் விளங்குவதில்லை! ஆங்கில மூலத்திலிருந்து பல நூல்கள் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. அரசியல் சமூக பொருளாதாரம், சரித்திரம் போன்ற நூல்களில் பழக்கத்திலில்லாத—செயற்கையான—கடினமான—பதங்களை உடைக்கும். கரண கொடூரமான 'புதிய ஹிந்தி'ச் சொற்களைக் கற்பதைவிட ஆங்கிலத்திலேயே கற்பது வெகு சுலபம்! இது நம் கருத்தல்ல வட நாட்டினரின் (ஹிந்தி பேசுவோரின்) கருத்தாகும்!

"கலைச் சொற்கள்" எல்லா மொழிகளிலும் 'உலகப் பொதுச் சொற்களா'"யிருப்பின் தவறில்லை. தமிழ் மொழி துவக்கத்திலிருந்து இன்று வரை ஒருசெழிப்புள்ள மொழி. 'கலைச் சொற்கள்' மொழி பெயர்ப்பதில் தமிழிற்கு ஒரு இடைஞ்சலுமில்லை. காரணம் சொற்களுக்குப் பஞ்சமில்லை.

"தேசிய மொழி" எனப்படும் ஆட்சி மொழி பிரதேச மொழிகள் எவ்வளவோ வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஆயினும் வட நாட்டு அரசியல் வாதிகளும் ஹிந்தி வெறியர்களும் ஏன் ஆங்கிலத்தை ஒழித்துக் கட்ட விரும்புறார்கள் தெரியுமா? தென்னாட்டில் சாதாரணமாக ஆங்கிலம் கற்ற ஒருவர் சரளமாகப் பேசி அரசியல் கருத்தை ஆங்கிலத்தில் வெளியிடுமளவிற்கு வட நாட்டு 'பட்டதாரிகளில்' பெரும்பாலோரால் முடியாது! இதுதான் உள் ரகசியம்!

"உலகக் கலைகளை"க் கற்க விரும்புவோர் ஆக்கிலத்தின் முக்கியமான இடத்தை மறுதளிக்கவே முடியாது. தென்னாட்டினர் ஆங்கிலத்தை விடவே முடியாது! அது உலகப் பொது மொழி! இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலத்தின் "தரம்" வெகுவாகக் குறைந்து விட்டது.

ஆங்கிலந்தான் கல்லூரிப் படிப்பிற்கு ஏற்ற மொழி! காரணம் உலகத்தில் எந்த மூலையிலிருட்பினும் ஒருவர் 'ஆங்கில மொழியின் மூலம் ஒன்று படமுடியும். வெளி நாட்டினர் இந்தியாவிலோ இந்தியர் வெளி நாட்டிலோ கல்வி பெற ஆங்கிலம் ஒரு உற்ற கருவி தென்னாட்டுப் பள்ளிகளில் ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த இரண்டாம் வகுப்பிலிருந்து (Basic English) (அடிப்படை ஆங்கிலம்) கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டியது நமது மதிப்பிற்குரிய சென்னை முதலமைச்சர் திரு காமராசர் அவர்களின் கடமையாகும். குழந்தைகள் ஐந்தாம் வகுப்பிற்கு வரும் பொழுது சுலபமாக ஆங்கிலம் பேசுமளவிற்கு ஆங்கிலங் கற்க அரசாங்கம் வசதி செய்யவேண்டும்!

பின்னர் கல்லூரியில் ஆங்கிலத்தின் 'தரம்' குறையவே முடியாது தமிழர்கள் உலகின்கண் முன்னேற வேண்டுமானால் ஆங்கிலம் கண்டிப்பாகக் கற்றேயாக வேண்டும். சிலர் கல்லூரிகளில் ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தியை வைக்குமாறு மறை முகமாகக் கூறி வருகின்றனர். இதை ஹிந்தி ஆசிரியர் உட்பட அனுமதிக்க மறுக்க வேண்டும்.

நம்மைப் பொருத்தவரை ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் சமமான அளவிற்கு 'ஹிந்தி வெறியர்கள்' கூறும் செயற்கை ஹிந்தி வளமடையவில்லை! அதை ஏற்பதைவிட "பிரதேச மொழிகளை" ஏற்பதே மேல்! பொதுவாகக்கல்லூரியில் ஆங்கிலந்தானிருக்க வேண்டும். வேண்டுமானால் பிரதேச மொழிகளில் ஆங்கிலத்திற்கு விளக்கங் கூறலாம். இனி விஷயத்திற்கு வருவோம்:-

திராவிட இயக்கத்தினர் இந்திக்கு விரோதிகளல்ல! அவர்கள் "ஹிந்தி ஏகாதிபத்தியத்தை"த் தான் எதிர்க்கிறார்களென்பது என் கருத்து. இந்தியை விரும்புபவர்கள் கற்பதைத் திராவிட இயக்கத்தினர் தடுப்பதில்லை. தென்னாட்டில் பல மொழிகள் கற்பவர்களுக்கு வசதியளிக்க வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஒரு மொழி "ஏகாதிபத்தியத்தை" ஏற்க முடியாது.

காந்தியடிகள் கூறிய ஹிந்தி மக்களால் புரிந்து கொள்ளக் கூடிய ஹிந்துஸ்தானி! ஹிந்தி வெறியர்களின் ஹிந்தி பழக்கத்தில் இல்லாத ஸம்ஸ்கிருதக்கலப்பு செயற்கை ஹிந்தியில் பாடங்கள், கற்பது மிகவும் கடினம்! ஹிந்தியில் பிரதேச மொழிகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. அவைகளையும் ஹிந்திதான் என்று கூறுகின்றனர்.

காந்தியடிகள் கூறிய மொழி சுலபமான 'ஹிந்தியும்-உருதுவும் கலந்த ஹிந்துஸ்தானி! ஹிந்தி வெறியர்கள் காந்தியடிகளின் கருத்தை ஏற்கவில்லை! ஆனால் அரசாங்கம் ஹிந்தி வெறியர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது! பல பிரதேச மொழிகள் ஹிந்தியின்பேரில் உலாவிக் கொண்டிருந்தாலும் நாம் இந்தியை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். அதாவது "மக்கள் புரிந்து கொள்ளும் ஹிந்தி வேறு! அரசாங்கம் கூறும் ஹிந்தி வேறு!" என்பதே!

குறிப்பு—இக்கட்டுரையாளர் இந்தியும் உருதுவும் சம அளவிற்குக் கற்றவராவார்.

கடலூர் ஓ. டி.

6-11-55 ஞாயிறு காலை 10-மணியளவில் கடலூர் ஓ. டி. தி. மு. கழ கட்டிடத்தில் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் கடலூர் நகர கழக செயலாளர் கெ. இளங்கோ தலைமையில் நடைபெற்றது. செயலாளராக அ. சந்தசாமி துணைச் செயலாளராக சி. துரைசாமி பொருளாளராக ஜெ. வி. நாயகம் மற்றும் 12-செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

வானொலியில் வேத ஒலி!

'இண்டியன் ரேஷனலிஸ்ட்' (நவ. 55) ஆங்கில மாத ஏடு — தமிழாக்கம் : பி. ஏ. வரதராஜ்

சிந்து — கங்கைச் சமவெளி பிரதேசங்களில் 5000 ஆண்டுகட்கு முன் குடியேறிய ஆதி ஆரியர்களிடை வழங்கிய தொன்மையான வேத ஆகமங்களை இப்போது அகில இந்திய ரேடியோ ஒலி பரப்பத் தீர்மானித்திருக்கிறது. இவ்வொலிப்பதிவுகள் அக்காலத்து சமஸ்கிருத மொழியிலேயே இருக்குமென்பது சொல்லத் தேவையில்லை. இந்த வேத பாடங்களைச் சரிவர உச்சரிக்கத் தகுதியுள்ள பண்டிதர்களை தீவிரமாகத் தேடி அலைகிருர்கள்.

ஆகவே அவ்விதப் பண்டிதர்களின் விலைமதிப்பு தற்போது அதிகரித்திருக்கிறது. இவ்வித ஒலி பரப்பு ஏற்பாடுகள் வைதீகர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கலந்த ஆர்வத்தை உண்டாக்கி யிருக்கிறது. உதாரணமாக ஒருவர் "மெயில்" (Mail) தினசரியில் எழுதுகிருர் : "ஒவ்வொரு வீட்டிலும் இவ்வேத பாராயணங்களின் இன்ப ஓசை ஒன்றே சமாதான உணர்ச்சியை உண்டாக்கப் போதுமானது. இவைகளின் அர்த்தம் புரியாமலிருப்பதுபற்றி அக்கரைப்பட வேண்டுவதில்லை" என்று. ஆனால் இப்பேரன்பருக்கு ஒன்று நினைவூட்ட விரும்புகிறோம். கேட்போருக்குஇவ்வேதங்களின் பொருள் புலப்படாமலிருக்கும்வரை நல்லதுதான். பொருள் விளங்கும் போதுதான் எந்த உணர்ச்சிகள் ஏற்படும் என்று சிந்திக்க வேண்டும். வெட்கமும் வெறுப்புமே ஏற்படும். இவ்வேதங்கள் என்ன கூறுகின்றன.

"ஓ! அக்கினி பகவானே! இந்த பசுவைப் பலியாக ஏற்றுக்கொண்டு எங்களை ஆசீர்வதியும்.

ஓ! வாயுபகவானே! இந்த மதுவை உண்டு எங்கள் பயிர்களை உம் கோபாவேசத்தினின்றும் காப்பாற்றும். ஓ! வருணபகவானே! ஆடுகளை பலியாகத்தருகிறோம், கைமாருக, இடி, மின்னல்களை எங்கள் மேல் செலுத்தாமலிருக்கவேண்டுகிறோம்.

இவை போன்ற கேவலமான கருத்துக்கள் கொண்டவையே வேதங்கள். அறிவு —பெருத, அநாகரிகம் குன்ருத, காட்டுமிராண்டிக் கும்பல்களாக அலைந்து திரிந்த அக்காலத்து ஆரியர்கள் இயற்கையின் விதிகளை அறிந்தகொள்ள இயலாத அபலைகள். தீ, காற்று, மின்னல் மழை, இடி இவை எவ்வாறு நிகழ்கின்றன என்று அவர்களுக்கு விளங்கவில்லை. ஆகவே, பயத்தினுல் இவைகளை தெய்வங்களாகவும் தேவதைகளாகவும்வழிபட்டு இவைகளின் "கோபத்தைத் தணிக்க" தங்களுடைய உணவுகளான பசுவின் மாமிசத்தையும் மதுவையையும் காணிக்கையாகச் செலுத்திஞர்கள்.

இந்த இருபதாம் நூற்ருண்டில், பழுத்த வைதீகர்களாக யிருப்பினும், மேற் சொன்ன காணிக்கைகளையும், பலிகளையும் பற்றிய விவரங்களைக் கேட்டு பெருமிதமடைய மாட்டார்கள். வைதீர்கள் அநேகமாக நடுத்தர வாசிகளே. அவர்கள் காந்தியார் போதித்த கொள்கைகளுக்கு வயப்பட்டிருப்பதால், மாமிசம் உண்ணுவதை வழக்கமாக கொள்ளாதவர்கள். புனித மென்றுக் கருதப்படும் தெய்வங்களுக்கு சுட்ட இறைச்சியை அர்ப்பணிப்பதை இவர்களால் எவ்வாறு மனதார சம்மதிக்க முடியும்? மேலும் காங்கிரஸ் ஆட்சி, சமீப காலத்தில், தீவிரமாக மதுவிலக்கை அமுல் நடத்தி வருகிறது. அதன் விளைவாக, கள், சாராயம், முதலிய மதுபானங்களின் உற்பத்தியும், விற்பனையும் கள்ள மார்கட்டில்தான் நடமாடுகிறது. வெளிப்படையாக மதுபானம் அருந்துவதை கௌரவச் செயலாகக் கொண்ட காலம் மலை ஏறி விட்டது இப்படிப்பட்டச் சூழ்நிலையிலும், கால நிலையிலும், தெய்வங்களுக்கு வெளிப்படையாக மது உண்ணக் கொடுப்பது. அவமானச் செயலாக யிருக்கு மல்லவா?

ஆகவேதான், முன் யோசனையுடன், எவருக்கும் புலப்படாத 5000 ஆண்டுகளுக்கு முன் வழங்கிய சமஸ்கிருத மொழியில் இவ்வொலி பதிவுகளை அமைத்து ஒலிபரப்ப அகில இந்திய ரேடியோ முடிவு செய்ததுதான் உத்தமமான காரியம். அப்படிச் செய்தால் தானே வேதங்களில் அடங்கியிருக்கும் ஆபாசங்கள் வெளிப்படாமலும் இருக்கும், கேட்பவர்களும் பக்திப்பரவசத்தால், அவரவர்கள் மன நிலைக்கு ஏற்றவாறு ஆவேசத்தை உண்டாக்கிக் கொள்ள உதவியாக யிருக்கும்!

இதுநிற்க, பகுத்தறிவாளிகள் (Rationalists) என்ற முறையில் அகில இந்திய ரேடியோவை வன்மையாகக் கேட்கிறோம்:— இவ்வொலிபரப்பு யோசனை எந்த மேதாவியின் மூளையில் உதித்தது? என்றுமில்லாத இந்த ஏற்பாட்டிற்கு நீதியும் நியாமும் என்ன? வேதங்களைத்தான் ஒலி பரப்ப வேண்டுமோ? இதர சமய நூல்களும், என்னபாவம் செய்தவைகளோ? அரபு மொழியிலிருக்கும் குரானையும், ஹீப்ரு மொழியிலிருக்கும் பைபிளையும் மாத்திரம் தாங்கள் குறிப்பிடவில்லை. பகுத்தறிவையே தெய்வமாகக் கொண்ட பிரகஸ்பதி-சூத்திரம் போன்ற நாஸ்திகம் கமழும் நூல்களிலிருந்து பற்பல பகுதிகளை ஏன் ஒலிபரப்பக் கூடாது என்று குறிப்பாகக் கேட்கிறோம். அவைகளும் வேதங்களைப்போல் பழைமையானவைகளே.

பண்டைய நூல்கள் எண்ணற்றவை. இவைகளில் எவற்றை விலக்கி எவற்றை ஒலிப்பதிவு செய்வதென்று தேர்ந்தெடுப்பது கடினமான காரியமென்பது, உண்மைதான். இன்னும், தெய்வ வழிபாட்டின் துதிப் பாடல்களை மாத்திரம் எடுத்துக் கொள்வதா அல்லது இதர பிற்காலத்து சித்தாந்த நூல்களையும் ஒலிபரப்பில் சேர்த்துக் கொள்வதா? எந்த வகுப்பாரின் கருத்துத் தொகையைச் சேர்த்து எதை விலக்குவது. இவைபோன்ற அநேக கேள்விகள் எழுவதும் இயற்கைதான். இவைகளை சமாளிப்பது கடினமே தர்ம சங்கடமான இந்த நிலையில் சிக்கிக் கொள்ளப் போகும் அகில இந்திய ரேடியோவிற்கு எங்கள் அனுதாபத்தைசெலுத்துகிறோம்.

ஆனால் வம்பை விலைக்கு வாங்கி தனக்குத் தானே அகில இந்திய ரேடியோ கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறது என்பதை நினைவூட்டுகிறோம். அர்த்தமற்ற ஒலிகளை பரப்பிப் பொன்ஞன

(8-ம் பக்கம் பார்க்க)

தோழர். வ. வீராசாமி. B.A., M.P. அவர்கள்

S. R. M. U. வின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்குக் காரணம் காட்டுகிருர்.

S. R. M. U. தலைவர் S. இராகவானந்தம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகல்

அன்புள்ள தோழருக்கு,

கீழ்கண்ட காரணங்களுக்காக நான் S. R. M. U. பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், 'தொழில் முரசு' ஆசிரியர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ளுகிறேன். என் விலகலை ஒத்துக்கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

நான் விலகிக்கொள்வதின் காரணங்களாவன.

தென்னட்டில் ஒரு சுதந்திர ஜனநாயக தொழிற் சங்கம் அமைய வேண்டும் என்ற கருத்துடன் சிறந்த கொள்கைகளைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்பகுதி ரயில்வேமென்ஸ் யூனியன் அது எந்த கருத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த வகையில் ஆரம்பித்ததிலிருந்தே இயங்கவில்லை.

மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர்களில் சிலர் தங்கள் இஷ்டம்போல் காரியங்களை செய்து இந்த யூனியன் வளராமல் செய்ய எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கிருர்கள்.

யூனியனுடைய கொள்கைகளை சரியாக புரிந்து கொள்ளாததினுலோ, அல்லது தவருக புரிந்துகொண்டதினுலோ, யூனியன் அங்கத்தினர்களுக்குள் வேற்றுமை அதிகரித்துள்ளது. பொன்மலை கிளை, திருச்சி கிளை, மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிலர் ஆகியவர்களுடைய சுய நலத்தாலும், கர்வத்தாலும் (Selfishness and arrogance) யூனியன் அங்கத்தினர்களுக்குள் அதிருப்தி, ஒற்றுமையின்மை, கருத்து வேற்றுமை உண்டாகி விட்டது.

இவர்களுடைய நடத்தை அங்கத்தினர்களுடைய நிதான மனேநிலையை (Moral) குலைத்து விட்டதுடன் யூனியன் வளர்ச்சிக்கும் அதிகப்படி அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கும் பாதகம் உண்டுபண்ணிவிட்டது.

கூட்டுப் பொதுச்செயலாளர் (A. K. சச்சிதானந்தம்) என்னைக் கேட்காமல் கிளைகளுக்கு சர்குலர் அனுப்புவதும், கடிதங்கள் எழுதுவதுமான செயலில் ஈடுபட்டு சர்வாதிகார (dictatorial) முறையில் காரியங்கள் செய்கிருர். அப்படி அவர் செய்யக் கூடாதென்று அவரை நான் எழுத்து மூலம் வேண்டிக்கொண்டும் அவர் யூனியன் சட்டத்திற்கு விரோதமானதும், யூனியனுக்கு கேடு பயக்கும் நடவடிக்கைகளையும் செய்துவருகிருர்.

"தொழில் முரசை" ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தோழர்களுக்கு முன் அறிவிப்பு கொடுக்காமலும் நியாயமான காரணமில்லா மேலும் அது வெளியிடாமல் நிறுத்தப்பட்டுவிட்டது,
அன்பார்ந்த தலைவர் அவர்களே!

நான் எந்த யூனியனில் ஆரம்பத்திலிருந்து உழைத்து வருகிறேனே அதில் இம் மாதிரி போக்கைவும், கட்டுப்பாடின்மை, கர்வம், கீழ்த்தரமான சுயநலம், ஆகியவைகளை யூனியனில் உள்ள யார் செய்தாலும் அதை நான் பொருக்க முடியாதென்பதை தெரிவித்துக் கொள்வதுடன் நீங்களும் இதை ஏற்றுக்கொள்வீர்களென நம்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நான் மேலே குறிப்பிட்ட குறைகளை அகற்ற எவ்வளவோ முயற்சிசெய்தும் சில அங்கத்தினர்களுடைய நடத்தையால் என் மனதிற்கு திருப்தி ஏற்படும் அளவிற்கு நான் வெற்றியடைய முடியாமற் போய்விட்டபடியால், பொதுச் செயலாளர் பதவியினின்றும், 'தொழில் முரசு' ஆசிரியர் பதவியினின்றும் விலகிக் கொள்ளுகிறேன்.

ரயில்வேத் தொழிலாளர்களுடையவும், யூனியனுடையவும் நன்மையையே பெரிதாகக் கருதி உழைக்கும் உங்களுக்கும், உங்களுடன் ஒத்துழைக்கும் அங்கத்தினர்களுக்கும் என் நன்றியையும் பாரட்டுதலையும் (Pay my glowig tribute) தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னிடம் காட்டிய அளவு கடந்த அன்பிற்கு என் நன்றி. மத்திய நிர்வாகக் குழுவிற்கும் கிளைகளுக்கும் என் நன்றியைத் தெரிவியுங்கள்.

என்னிடம் படிப்பகம் அமைக்க கொடுக்கப்பட்ட ரூ. 75 உள்ளது. அதை விரைவில் உங்களுக்கு அனுப்புகிறேன்,

உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) வ. வீராசாமி, 17—10—55

நகல் 1. கூட்டுப் பொதுச்செயலாளர், 2. பயில்,

கேள்வி? பதில்.

கு. செல்லையா, அவிசாவேல்ல, இலங்கை

கே : இந்தியப் பிரதமர், டில்லியில் இராவணன் சிலையை எரிக்கும் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி மகிழ்ந்தாராமே—அப்படியானால் தமிழரைப்பற்றி அவர் கருத்தென்ன?

ப : வடநாட்டு ஆதிக்கத்துக்கு காவடி தூக்கியும் குனிந்து குட்டக்குனிந்துகொடுத்தும் சில சோற்றாலடித்த பிண்டங்கள் தமிழகத்தின் பொது வாழ்விலே நடைபோட்டு வருவதால், அந்தவிபீஷணர் கூட்டத்தை வைத்தே தமிழர்களின் தன்மானத்தைநேரு பண்டிதர்கள் அளந்து பார்க்கிறார்கள். ஆனால் அதனின் விளைவு என்ன ஆகும் என்பதை விரைவில் நேரு பண்டிதர்கள் உணரத்தான் போகின்றனர்.

ஃ

மு. ஏகாம்பரம், ஏகாம்பரக் குப்பம்

கே : முன்னாள் மைசூர் திவான் சர். எம்' விசுவேசுவரய்யா ஆரியரா—திராவிடரா?

ப : அவர ஒரு பார்ப்பன அறிஞர்

ஃ

இரா. பழனிச்சாமி, இராசிபாளையம்

கே : நம் நாட்டு கம்யூனிஸ்டுகள் தி மு. கழகத்தின் மீது கொண்டுள்ள எண்ணம் என்ன?

ப : கம்யூனிஸம் என்ற பேரால் இது வரை நம் நாட்டிலே செய்யப்பட்டு வந்த செப்படிவித்தைகளின் 'டேரா' கிழிகிறதே என்ற கோபம்தான்.

ஃ

கோ. கண்ணன், பெங்களூர் 3.

கே : இந்தியை எதிர்க்கும் தி. மு. கழக பத்திரிகையான உங்கள் பத்திரிகையில் இந்தி படத்திற்கு விமர்சனம் எழுதலாமா?

ப : தோழரே, உங்களின் கேள்வியை மிகவும் வரவேற்கிறேன். அந்த விமர்சனத்தை மீண்டும் கூர்ந்து படியுங்கள். தென்னாட்டு பட அதிபர்களில் சிலர் இந்தி நடிகர்களின் வேட்டைக்காடாக நமிழகத்தை ஆக்கிவரும் தவறான செயலைக்கண்டிப்பதே அந்த விமர்சனத்தின் கருத்தாகும்

ஃ

எ. ஜி. சவுந்தரன், அவிசாவேல்ல, இலங்கை

கே : தி மு' கழகத்தை சில கட்சிகள் அறிஞர் கட்சி என கூறுகிறதே, அப்படியானால் அக்கட்சிகளில் இருப்பவர்களெல்லாம் அறிவு இல்லாதவர்களா?

ப : தோழரே ஏன் இவ்வளவு கோபம் உங்களுக்கு? தி. மு, கழகம் அறிஞர் கட்சி என்று கூறும் அந்தசில கட்சிகள்வயிற்றுக் கடுப்புக் கட்சிகளாக யிருக்கக்கூடும்.

ஃ

எம், வீராசாமி, விழுப்புரம்

கே : தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரர்களுக்குள் கோஷ்டி சண்டை முற்றுகிறதே, அது எப்படி முடியும்?

ப : ஊரார் வீட்டுச் சண்டையாயினும், அதுமேலும்வளராமல்ஒழுங்குபெற முடிய வேண்டும் என்பதே நமது எண்ணமாகும் நிற்க, தற்போது தமிழ் நாட்டுக் காங்கிரசை நடத்திச் செல்பவர்களின் ஆதிக்க வெறி திருந்தாதவரையில் உண்மைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கத்தானே செய்வார்கள். முன்பு அந்த நிலையை உருவாக்கியவர்களும், இன்று தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைமைப் பீடத்தில் இருப்பவர்கள்தானே!

ஃ

இரா. அ. பழனிசாமி, இராசிபாளையம்

கே: இந்தியாவுக்கு வர யிருக்கும் ரஷ்யப் பிரதமர் புல்கானின் இந்திய கம்யூனிஸ்டுகளின் சேவையைப் பற்றி தெரிந்து கொள்வாரா?

ப ; தெரிந்து கொள்வது மட்டுமல்ல— நன்றாகப் புரிந்தும் கொள்வார்!

ஃ

டி. அரங்கநாதன், திருச்சி

கே : தமிழ் நாட்டுக் காங்கிரசில் காமராச நாடார் கோஷ்டி — எதிர்ப்புக் கோஷ்டி என இரண்டு இருக்கின்றன. அவர்களுக்குள் தகராறு என்றால், அதை எதிர்த்து காமராச நாடாருக்கு ஆதரவாக போராடப் போவதாய் பெரியார் ஈ. வே ரா. சொல்லுகிறாரே? இது எப்படி சாத்தியமாகும்! இவருக்கும் காங்கிரஸ் உள் கோஷ்டிகளுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. பெரியார் ஈ. வே ரா காங்கிரசில் சேர்ந்து இப்படிப் பேசினால் அருத்தம் உண்டு ஆனால் திராவிட கட்சித் தலைவராய் இருந்து கொண்டு இப்படியெல்லாம் பேசுவது முறை தானா? அல்லது பொருத்தமாகிலும் இருக்கிறதா?

ப : நீங்கள் கேட்பது சட்டப்படி-ஏன் நடை முறைக்கும் ஏற்றதுதான். ஒருக்கால் பெரியார் அவர்கள், காமராசர் அவர்களுக்கு "ஆத்மார்த்திக ஆதரவு" கொடுப்பதாயிருந்தால்.........?

ஃ

டி. எம், சபாபதி, தஞ்சை

கே : அஞ்சா நெஞ்சனே உங்கள் கட்சி, ஆட்சிக்கு வரும்போது உங்கள் கட்சிக்காரர்களுக்கு ஆளுக்கு எத்தனை ஏக்கர் நிலம் தருவீர்கள்?

ப : மேற்கண்டவாறு கூறப்பட்ட உறுதியை நம்பி ஏமாற்ற மடைந்த காங்கிரஸ்காரர்களில் தாங்களும் ஒருவரென்று உங்கள் கேள்வியிலிருந்து தெரிகிறது. தி. மு' கழகத்தில் அப்படி ஒன்றும் அரசியல் பேரம் செய்யும் வழக்கமில்லை. எனவே தாங்கள் வேறு முகாமைத் தேடிச் செல்லுங்கள்.

★

திராவிடர் திருநாளன்று எமது நல்விருந்து

திராவிடன்

பொங்கல் மலர் '56

- ஆண்டு தோறும் வாசகர்களின் பெரு மதிப்பையும், பேராதரவையும் பெற்று வருகிறது.
- சென்ற ஆண்டு திராவிடன் பொங்கல் மலர்—மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் சிந்தனைக்கும் விருந்தளித்திருக்கிறது.
- சுதேசமித்திரன், இந்து போன்ற தேசிய இதழ்களும் திராவிடன் பொங்கல் மலரின் சிறப்பைப் பொதுவாக பாராட்டி யுள்ளன.
- ஆக—கடந்த எட்டு ஆண்டுகளாக திராவிடன் பொங்கல் மலர்—கழகத் தோழர்களிலிருந்து மற்ற அனைவரின் பாராட்டுதலைப் பெற்று வந்துள்ளது.
- இந்த ஆண்டு, மேலும் சிறப்புற்று விளங்கும் வகையில் திராவிடர் திருநாளன்று திராவிடன் பொங்கல் மலர் தெவிட்டாத விருந்தை அளிக்கும்.
- புத்தம் புதிய அம்சங்கள், கண்களையும் கருத்தையும் கவரும் முகப்பு—கட்டுரை, கதை, கவிதை, அரசியல் குறிப்பு, படங்கள் அனைத்தும் மலரை அலங்கரிக்கும்,

100 பக்கங்கள் : விலை ரூபாய் ஒன்று

முக்கிய குறிப்பு : ஏஜெண்டு தோழர்கள், தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளுக்கான முன் பணத்துடன் இம்மாத இறுதிக்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தயவு செய்து மலருக்கென தனியாக ரூபாய் ஒன்று அனுப்பிவைக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'—சென்னை-1

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1